தென்மொழி

சுவடி 28
ஓலை 8

விலை :
உருபா 4-00

உலக விளையாட்டில் ஒரு வெண்கலத் தொங்கல்!

உலக விளையாட்டாம் ஒலிம்பிக்கு அரங்கில்
இலகுற வெற்றிகள் குவிக்கச் சென்ற
இந்தியா வெண்கலத் தொங்கல் ஒன்றைப்
பந்தயப் பரிசாய்ச் சுமந்துவந் துள்ளது
வறியவிந் நிலைக்குக் கரணியம் யாதெனச்
சிறிதே எண்ணப் புகுந்தால் யாவரும்
துளியள வேனும் ஐயுற வின்றித்
தெளிவாய் ஒன்றைத் தெரிந்து கொள்ளலாம்
கட்டாயமாக ஆவணங் களிலே
ஒட்டாத உணர்வொடு குறிப்பதே யல்லால்
அனைவரும் இந்தியர் என்றீங் கெவரும்
தினையளவு தானும் நினைப்பதே இல்லை
வங்காளி மராட்டியன் குசராத்தி அசாமி
கொங்கணிக்காரன் மலையாளி தெலுங்கன்
கன்னடன் தமிழன் இராசத் தானியன்
இன்னவாறு பலரும் இருப்பதே உண்மை!
வென்றியிற் சிறந்தவர் எவரையும் இந்தியர்
என்ற பொதுமை உணர்வோடு யாவரும்
ஒருமுக மாகப் பாராட்டக் காண்கிலம்
பெருமையின் வென்றி ஒட்டத்துக் கொண்ட
பெண்மணி உசாவை இந்தியச்சி என்றே
ஒண்புகழ் சிறப்ப உயர்த்திய துண்டா?
முக்களம் வென்ற மங்கை அமுதாவை
எக்களம் போற்றிப் பாராட்டி மகிழ்ந்தது?
இயல்நிலை இதுவே யாதலின்
உயர்வுறு வெற்றி இந்தியர்க் கிலையே!

- இறை

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

தி.பி. உ0உஎ : மடங்கல் 1996 ஆகத்து

மக்களைச் சமம் - எனச் செய்வோம்!

பிறப்பினால் மக்களை நால்வகை வருணமாய்ப்
பிரிப்பதும், அவர்களை மேலும்
சிறப்பிலாப் பலநூறு சாதியாய்ப் பகுப்பதும்
சிந்தித்துப் பார், தம்பி, இழிவே!
உறுப்புகள் எல்லாம் ஒன்றுபோல் உள்ளன!
உணர்வதும் அறிவதும் பொதுவே!
மறுப்பிதற் குண்டோ? வேற்றுமை உண்டோ?
மக்களைச் சமம்எனச் செய்வோம்!

இறையவன் என்றோர் உணர்வினைக் கொண்டே
எத்தனைப் பிரிவுகள் மதங்கள்!
மறைவென்ன தம்பி! மறுப்பென்ன தம்பி!
மதங்களால் எத்தனைச் சண்டை?
நிறைவுற மக்களின் நலன்கள் கருதிடும்
நிலைதான் அரசியல் என்றால்,
குறைவறக் கட்சிகள் பற்பல வேண்டுமோ?
கொள்கையென்(று) ஒன்றுபோ தாதோ?

மக்களைச் சுரண்டியே பிழைக்குமோர் கூட்டம்!
மற்றவர் ஏழைகள் ஆமோ?
தக்கவா றெல்லா உடைமையும் பொதுவெனத்
தகுதிசெய் தால்அது தீதோ?
மிக்கவே நலன்களை ஒருவனே நுகர்வதும்
மிகுதியோர் சாவதும் நன்றோ?
ஒக்கவே அனைவரும் உண்பதும் உடுப்பதும்
உறைவதும் சமம் எனச் செய்வோம்!

- பாவலரேறு

தமிழ்ச்சிட்டு குரல் : 21 இசை : 1

" கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் தி.பி.1990 (1959)

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

நம்மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

சுவடி : 28) தி.பி. உ0உஎ- மடங்கல் (ஆகத்து-செப்தம்பர் '96) (ஓலை 8

மொழி இன நலமும் வாழ்நிலமும்!

தமிழ்நாட்டில் தி.மு.கழக அரசு அமைந்து சில மாதங்களே ஆயினும் தமிழுணர்வாளர்கள், அறிஞர்கள் பல ஆண்டுக் காலமாக முன்வைத்துக் குரல் கொடுத்துவந்த கோரிக்கைகள் பலவற்றை நிறைவேற்றி அவர்கள் அனைவருடைய வரவேற்பையும் ஒருமுகமாகப் பெற்றிருக்கிறது. முதல்வர் கலைஞர் அவர்கள் தமிழ் ஆட்சிமொழித் துறைக்கென்றே தனி அமைச்சகத்தை ஏற்படுத்திப் புகழ் நிறுவியிருப்பதை எத்தனை முறையும் பாராட்டலாம்!

மொழிநூல் மூதறிஞர், செந்தமிழ் ஞாயிறு பாவாணர் அவர்களைப் பெருமைப் படுத்துமுகமாகவும், அவருடைய அருங்கருத்துகள் மக்களிடையே பரவுதற்கு வழிவகுக்கும் வகையிலும், அவர்தம் குடும்பத்தார்க்கும் கணிசமான பொருட் கொடை வழங்கி, ஐயா அவர்களுடைய நூல்கள் அனைத்தையும் அரசுடைமை யாக்கியிருப்பது நன்றென்றவற்றுள்ளும் நன்று!

சென்னை மாநிலம் (Madras State) என்பது தமிழ்நாடு (மாநிலம்) என்று இருபத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்னரே பெயர்மாற்றப்

பெறினும் சென்னை என்பது ஆங்கிலத்திலும் பிற அயல்மொழிகளிலும் சென்னையாய் இல்லாமல் 'மெட்டுராசு', 'மதராசு' என்றும் தொடர்ந்து நீடித்துவந்த நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்துப் பிறமொழிகளிலும் சென்னை என்ற பெயரே சிறக்கச் செய்திருப்பதும்; திருவில்லிபுத்தூர், திருவரங்கம் முதலான பழந்தமிழ் ஊர்ப் பெயர்களில் பெருமையுற விளங்கிய திருவை வீழ்த்தி, அவ்விடத்தைக் கைப்பற்றிக் கொண்டிருந்த ஸ்ரீயை விலக்கி யொழித்து மீண்டும் திருச் சேரச் செய்திருப்பதும் நல்லமனம் படைத்தவர்கள் எல்லாராலும் பாராட்டப் பெற்றிருக்கின்றன.

பெயர் - விளம்பரப் பலகைகளில் தமிழ் மேனிலையில் பெருமையுற இடம் பெற வேண்டும் என்றும், தமிழே ஆட்சிமொழி என்றும் இருப்பினும் செயலிழந்து கிடந்த அவ் அரசாணைகளை உயிர்ப்பித்துத் தடைகளைக் கடந்து அவற்றை நடைமுறைப் படுத்துதற்கான நடவடிக்கைகள், தமிழ்வழிக் கற்றவர்க்கே வேலை வாய்ப்பில் முன்னுரிமை என்னும் முனைப்பு இன்னும் இன்னோரன்ன பிறவெல்லாம் நம் இனப் பகைவர்களுக்கு மனக் கலக்கத்தையும் எரிச்சலையும் உண்டாக்கினும் தமிழ் நெஞ்சங்களைக் குளிர்வித்துத் தழைப்புறச் செய்திருக்கின்றன!

மன எழுச்சியூட்டும் உந்தாற்றலாகவும், அறிவு வளர்ச்சிக்கு அடிப்படையாகவும் விளங்கும் தாய்மொழி யுணர்வைச் செழுமைப் படுத்தலும், கல்வி நிலைகளைச் செம்மைப் படுத்தலும், அடிமையின் நீங்கி உரிமையிற் கிளாந்து தமிழினம் முன்னேற்றப் பாதையில் முனைந்து நடையிடுவதற்கான அருமுயற்சிகள்!

இவ் வகையில் மேற்கூறியவற்றைத் தொடக்கமாகக் கொண்டு தொடர்ந்து செய்யப்பட வேண்டிய பணிகள் ஏராளம். அவற்றை இவ்வரசு காலமுங் களனும் நோக்கிச் செய்து நிறைவேற்றும் என்னும் நம்பிக்கை கொள்வோமா!

இவ்வாறு நாம் மகிழ்ச்சியில் மைந்துறும் போதே, தமிழ்நிலம் படிப் படியாக அயலவர்தம் வேட்டைக் காடாகவும் நச்சுப் பொய்கையாகவும் மாற்றப்பட்டு வருகின்ற நிலை நம் நெஞ்சத்தை உலுக்குகின்றது! தொழில்வளர்ச்சி - வெளிநாட்டார் முதலீடுகள் என்னும் பெயரில் இங்குள்ள சிறு சிறு தொழில்களை நசுக்கி விட்டு, உழைப்பாளிகளை ஓரங்கட்டிவிட்டு அயலவர்கள் அழுத்தமாகக் காலூன்றி வருகின்றனர்.

அண்மையில் கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் மாட்டிறைச்சிப் பதப்படுத்தத் தொழிலகம் பெரிய அளவில் தொடங்கப்பட விருக்கிறது. மற்ற மாநிலங்கள் பல வேண்டாமென்று மறுத்துவிட்ட நிலையில் இதனைத் தமிழ் நாட்டரசு இருகை நீட்டி ஏற்றுக் கொண்டிருக்கிறது. கால்நடைகளின் கேரளச் செலவைத் தடுத்துத் தமிழ் நாட்டுக்கு ஆக்கஞ் சேர்க்கும் தரமான திட்டமென்றால் இதனைத் தமிழ்நாட்டரசே கூட மேற்கொள்ளலாம். ஆனால் இதனால் உண்டாகும் நன்மைகளைவிடத் தீமைகளே அதிகம். நச்சுத் தன்மை வாய்ந்த தொழில்களை இந்தியா போன்ற நாடுகளில் வளர்த்துவிட்டு அவற்றின் நற்பயன்களை மட்டும் உறிஞ்சிக் கொள்ளும் வல்லரசுகளின் நயவஞ்சகத் திட்டங்களுள் இதுவும் ஒன்று.

பொள்ளாச்சியில் இத் தொழிலகம் நிறுவப்பட்டுவிட்டால் விளைச்சலுக்கான வேளாண்மை நலிவுற, இறைச்சிக்கான கால்நடை வளர்ப்பே ஏற்றம் பெறும். ஏற்கனவே இத் தொழிலைச் சிறு சிறு அளவில் செய்துவருவோர் சாம்பிப் போவர். இறைச்சி - தோல் கழிவுகளால் சுற்றுச் சூழல் நச்சுத்தன்மைப்பட்டுப் பயிர் பச்சைகளும் கால்நடைகளும் நரங்கும் மக்கள் நோய் நொடிகளுக்கு ஆளாவர். இன்று பாலாற்றுப் படுகை பாழாகிப் போராட்டக் களமாகத் தொடர்ந்து வரும் நிலை, நாளை கோவை மாவட்டத்திலும் உருவாகும். நுகர்வு அளவில் உள்நாட்டு மக்கள் மூன்றாந்தரத்தவர் நான்காந்தரத்தவராக ஒதுக்கப்படுவர்; ஏற்றுமதி யொன்றே ஏற்றம் மிக்கதாகக் கொள்ளப்படும்.

இறால் என்னும் மீன்வகை அயல்நாட்டுக்கு ஒப்பந்தஞ் செய்யப்பட்டு விட்டமையால் இன்று தமிழ்நாட்டு ஏழை எளிய மக்களுக்கு அஃது அப்பாற்பட்ட பொருளாகிவிட்டது. இன்றைய சின்னஞ் சிறுவர்கள் பலர்க்கு அதன் முழுவடிவம் என்ன வென்றே தெரியாத நிலை ஏற்பட்டு விட்டது நினைவு கூரத்தக்கது. இப்படியே இன்னும் பல.

ஏற்றுமதி ஒருபுறமிருக்க அயல்நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களின் நிலை என்ன? இங்குள்ள பெரும்பான்மையரான அடித்தட்டு மக்களின் அன்றாடத் தேவையை நிறைவு செய்வனவா? இல்லை. அவையெல்லாம் பெரும்பாலும் ஏற்றம்மிக்க பெருஞ் செல்வர்களின் ஏந்தான இன்ப வாழ்க்கைக்கே உரியன!

கவர்ச்சியான விளம்பரங்களாலும் கணிசமான கழிவுத் தொகையாலும் தமிழ்நாட்டை வணிகச் சந்தையாகக் கொண்டு

உள்நாட்டுத் தொழில்களை உருக்குலைக்கும் கெடும்புகளுக்குக் கணக்கு உண்டா? 'பெபுசி', 'கொக்க கோலா' முதலான அயல்நாட்டுப் பருகைகளின் நுழைவால் - பரவலால் தமிழ்நாட்டின் 'காளிமார்க்கு' போலும் பருகை நிறுவனங்கள் தலையெடுக்க மாட்டாமல் அடிபட்டுப் போனதை எண்ணிப் பார்மின்!

வானூர்திச் சக்கரங்களுக்கான வட்டகைத் தொழிற்சாலை யொன்றை அமெரிக்க முதலீட்டில் வட சென்னையில் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் கடந்த காலத்தில் நடைபெற்ற போது அத் தொழிற்சாலையால் சுற்றுச் சூழல் கெட்டுவிடும்; மக்கள் வாழ்க்கை நலிவுபடும் என்று சுட்டிக்காட்டப்பட்டது. தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்தால் சுற்றுச் சூழலைக் கெடவிட மாட்டோம் என்று அதனை ஒருவாறு மறுத்துவந்தது. ஆயினும், 'தாபர் தூபாண்டு' என்னும் அவ்வட்டகைத் தொழிற்சாலைக்கு வாயில் திறந்து விடப்பட்டிருக்கிறது! இதனால் வட சென்னை - திருவொற்றியூர்ப் பகுதிகள் மக்கள் நல்வாழ்வுக்கான தகுதியை இழக்கப்போவது நாளை நடைபெறவிருக்கும் உண்மை நிகழ்ச்சி!

இங்குச் சுட்டிக் காட்டப்பெற்றன எடுத்துக் காட்டுகளே. இத்தகையவற்றைப் பட்டியலிடின் அது மிகநீளும். ஆகவே மொழியுணர்வுக்கு எள்ளளவும் குறைவற்ற நிலையில் எதிர்கால நோக்கோடு இன நலத்தையும் கருதி வாழ்நிலத்தையும் அயலவர்தம் வல்லாளுமைக்கு இடந்தராமல் தவிர்ப்பதில் தமிழ்நாட்டரசு எச்சரிக்கையாய் இருத்தல் வேண்டும்!

- இறை

பிழைதிருத்தம் !

தென்மொழி அச்சக அமைப்பு முறை மாற்றத்தினாலும் வேறு சில சிக்கல்களாலும் தென்மொழியின் கடந்த சில இதழ்களில் அச்சுப் பிழைகள் பல தவிர்க்கவியலா நிலையில் இடம்பெற்றுவிட்டமைக்கு வருந்துவதோடு இனித் தென்மொழி செம்மையாக வெளிவரும் என்பதையுந் தெரிவித்துக் கொள்கிறோம்.

சென்ற இதழின் (சுவடி: 28 ஓலை: 7) 31 ஆம் பக்கத்தில் இடம் பெற்றுள்ள கட்டுரையில் மூன்றாம் பாகி முதல் 'யான்' என்றும் 'ஐயா' என்றும் தடிப்பெழுத்துகளில் உள்ளனவற்றைத் தொடர்ந்து வரும் செய்திகளை உரையாடல் வடிவில் அமைத்துக் கொள்வதோடு, ஐந்தாம் பாகியின் மூன்றாம் வரியில் உள்ள 'பிறகு ஒருவாறு' எனத் தொடரும் பகுதியைத் தனிப் பாகியாகக் கொள்ளுமாறும் வேண்டுகிறோம்.

- அமைச்சர், 'தென்மொழி'

சிறைவாழ்வில் இரு நாட்கள்

(பாவலரேறு நாட்குறிப்பு - சுவடி:28 ஓலை: 6 இன் தொடர்ச்சி)

20.11.65 காரி (நான்காம் நாள்)

காலை மணி 8.50க்குத் தலைமை மருத்துவர் வந்தார். என்னைப் பற்றிப் பிற மருத்துவர்களிடம் கேட்டார். நான் அரசியல் குற்றவாளி என்று அறிந்ததும் 'இவரை ஏன் இந்தப் பொதுப் பகுதியில் வைத்தி ருக்கின்றீர்கள். உடனே 'தனிப் பகுதிக்கு மாற்றுங்கள்' என்று ஆணையிட் டார். அதன் பின் என்னைச் சிறப்புப் பகுதிக்கு மாற்றுவதற்குரிய எல்லா முயற்சிகளும் நடந்தன.

அதற்குள் மணி 9 ஆகிவிடவே எனக்குக் காவலாகப் புதியவர் ஒருவர் வந்தார். அவர் எண் 230. இவர் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சோந்தவர் என்று அவர் பேச்சிலிருந்து அறிந்து கொண்டேன். இவர் கொஞ்சம் கடுமையாகவே நடந்து கொண்டார். இவர் என்பால் வந்து நின்ற 3 மணிநேரமும் மிகவும் கொடுமையான நேரம். இவர் வந்து நின்றதற்கும் என் அன்னையார் வெளியில் வந்து நின்றதற்கும் பொருத் தமாக இருந்தது. அவரை உள்ளே விட மறுத்துவிட்டார். அதன்பின் மருத்துவர் என்னைச் சிறப்புப் பகுதிக்கு அழைத்துச் செல்லுங்கள் என்று மருத்துவப் பணியாளர்களுக்கு ஆணை இடவே அவர்கள் என்னை எழுந்து வருமாறு கூறினார்கள்.

இதற்குள் அன்னையார் தாம் கொண்டு வந்த நண்பகல் உணவை வேறு ஒருவர் வழி என் படுக்கையறைக்கு விடுத்தார். ஆனால் 230 அவற்றை நான் உண்ணுதற்கும் இசையவில்லை. அவர் உடனே அந்தப் பகுதிச் செவிலி ஒருவரிடம் 'இவருக்கு வெளியிலிருந்து வரும் உணவை, எங்கள் தலைமைக் காவலர் இசைவு பெற்றாலன்றி உண்ணக் கொடுக்கக் கூடாது' என்றார். மருத்துவ மனையில் எனக்குத் கட்டுப்பாடான உணவே கொடுக்கப்பட்டது. காலையில் மருந்தும், 11 மணி அளவில் ஒரு குவளை பாலும், இடையில் இரண்டு சாத்துக்குடிப் பழங்களுமே எனக்கு உணவாகக் கொடுக்கப் பெற்றன. இவற்றை மட்டும் சாப்பிட்டு விட்டு என்னால் களைப்பில்லாமல் இருக்க முடியவில்லை, எனவே வீட்டிலிருந்து சிறிது மிளகுச்சாறு, மோர் அல்லது தயிர் கலந்த சோறும் அவற்றுடன் ஏதாவது காய்கறியும் தருவித்துக் கொண்டிருந்தேன். இந்த 230 இதைத் தடுத்தார்.

உடனே மருத்துவரிடம் போய் 'வீட்டிலிருந்து உணவு வந்துள்ளதென்றும் நான் சாப்பிடலாமா? என்றும் கேட்டேன். என்ன உணவு என்று கேட்டறிந்தபின் 'சாப்பிடுங்கள் என்று' மருத்துவர் கூறவே,

'அதை எழுதிக்கொடுத்து விடுங்கள்' என்று அந்த 230 கேட்டார். மருத்துவர் மிகக்கடுமையாக 'அவர் உங்களுக்குக் குற்றவாளியாக இருக்கலாம் ஆனால் எங்களுக்கு நோயாளி' அவருக்கு என்னென்ன உண்ணக் கொடுக்க வேண்டும் என்று எங்கட்குத் தெரியும். உனக்குத் தெரியவேண்டிய தேவை இல்லை' என்று 230-விடம் கடுமையாகத் தெரிவித்து விட்டு, என்னைப் போய்ச் சாப்பிடச் சொன்னார்.

இதற்குள் என்னைச் சிறப்பான பகுதிக்குக் கொண்டு போகப் பணியாட்கள் முயன்றனர். உடனே 230_அதையும் தடுத்தார். 'இவரை எங்கள் சிறைத்தலைவர் இசைவின்றி எங்கும் அழைத்துச் செல்லக் கூடாது' என்று கூறினார். இது மருத்துவரிடம் தெரிவிக்கப் பெற்றது மருத்துவருக்குக் கடுமையான சினம் வந்தது. உடனே 230_ஐக் கூப்பிட்டு 'இந்தாப்பா, அவரை மருத்துவமனைக்குக் கொண்டுவந்து விட்டால், அவரை எங்கெங்கு கொண்டு போகவேண்டும், எங்கெங்கு வைத்திருக்கவேண்டும் என்பதெல்லாம் எங்கள் கட்டளைப்படிதான் நடக்க வேண்டும். நீ அவர் பின்னாலேயே போய்க் கொண்டிருக்க வேண்டுமேயன்றி இதையெல்லாம் கேட்கக் கூடாது' என்று கடுமையாகக் கூறினார். 230,'அதெல்லாம் எனக்குத் தெரியாது என் மேலதிகாரியின் ஆணையின்றி அவரை எங்கும் எடுத்துச் செல்லக்கூடாது' என்றார்.

மருத்துவர் மிகக் கடுமையான குரலில், 'நீ இப்பொழுது அவரைச் சிறப்புப் பகுதிக்கு எடுத்துச் செல்லப் போகின்றாயா? இல்லையா?' என்று கேட்டார். 'மருத்துவப் பகுதிக்கு வரும் நோயாளிகளை "படப் பிடிப்பு நிலையத்திற்கும், குருதி ஆய்வுப் பகுதிக்கும், அறுவைப் பகுதிக்கும் வேறு தேவைப்பட்ட பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லும் அதிகாரம் மருத்துவருக்கு உண்டு. நீ புதியவன் போலத் தெரிகின்றது. உனக்கு ஒன்றும் தெரியாது" என்று அவர் அவரிடம் கூறிக்கொண்டே 'உன் அடங்காமை பற்றி மேலதிகாரிகளிடம் தெரிவிக்கின்றேன்' என்று சொல்லி முடித்தார்.

உடனே வெளியில் நின்ற அன்னையாரை கூப்பிட்டு என் பொருள் களையும் போர்வை, தலையணையையும் எடுத்துக் கொள்ளும்படி கூறி, என்னைக் கூட்டிச் செல்ல வந்த மருத்துவப் பணியாளர் பின் நடந்தேன். அவர் என்னைச் சிறப்புப் பகுதிக்கு அழைத்துச் சென்று ஓர் அறையி லிட்டார். அந்த அறையில் மூன்றே படுக்கைகள் இருந்தன. அங்கு போய்ச் சேர்ந்தபின்னும் 230இன் கடுமையான பார்வை இருந்தது. அன்னையார் கொண்டுவந்த உணவை இன்னும் சாப்பிடாமல் இருந்தேன். படுக்கைக்கு வந்து சிறிது நேரம் சென்ற பின் சாப்பிட அமர்ந்தேன். சாப்பிட்டு முடிந்த பின் உணவுப் பண்டங்களுடன் அன்னை வீடு சென்றார்கள்.

நான் புதிதாகக் குடிபுகுந்த சிறப்புப் பகுதியின் அறையில் உள்ள மூன்று படுக்கைகளுள் மேற்குப்புறமாக நுழைவாயிலின் அண்டையில் உள்ள படுக்கையை நான் எனக்கென எடுத்துக் கொண்டேன். நண்பகல் மணி பன்னிரண்டு, 230க்கு மாறாக வேறொருவர் வந்தார். ஆனால் இவர் மிகவும் அன்பாக நடந்துகொண்டார். ஏறத்தாழ 4 மணிக்கு வந்த அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் கழராம்பன், நடேசன், மற்றும் இருவர் (பெயர்கள் தெரியவில்லை) என்னிடம் பேசவும், நெருங்கவும் அவர் எவ்வகைத் தடையும் செய்யவில்லை. ஆனால் மிகுந்த நேரம் உரையாடக் கூடாது. அவ்வாறு உரையாடினால் தமக்குத் தொல்லை விளையும் என்று மட்டும் எச்சரித்துக் கூறினார்.

மாணவர்கள் சிறிது நேரம் பேசியிருந்துவிட்டு வீடு போனார்கள் இவர்கள் வந்து போவதற்குமுன் இலெனின் தங்கப்பாவும், தங்கமும், அன்னையாரும் வந்தார்கள். மாலை 4 மணிக்குப் பூங்குன்றனும் அன்னையாரும் வந்தனர். அதன் பின் கமலாவும் வந்தாள். இடையில் தலைமை மருத்துவரும் ஒருமுறை வந்து அந்த 230 தம் அலுவலர்களிடம் தாறுமாறாக நடந்து கொண்டதைப் பற்றி அப்பொழுதிருந்த காவலரிடம் கடுமையாகக் கூறி இனிமேல் இதுபோல் கேள்விப்பட்டால் மாவட்டக் காவல் தலைவருக்கு முறையீடு செய்வேன் என்று அச்சுறுத்தினார்.

அன்றைய இரவு அமைதியாக எழுதிக் கொண்டிருந்து விட்டுத் திருக்குறளிலும் சில குறள்கள் பார்த்துவிட்டு இரவு 10.30 மணிக்குப் படுக்கைக்குச் சென்றேன்.

21.11.65 ஞாயிறு (ஐந்தாம் நாள்)

இன்று முன்காலை 5 மணிக்கே எழுந்து பல்துலக்கி முகம் கழுவி விட்டுத் திருக்குறளைப் படித்துக் கொண்டிருந்தேன். காலை 6 இல் இருந்து 9 வரையுள்ள காவலர் மிக நல்லவராகக் காணப்பட்டார். மாலையில் 225 என்ற எண்ணுள்ள காவலர் வந்தார்.

இவர் 230 என்ற காவலரைப் போலவே கடுகடுப்பானவர். வேலைக்கு வந்து நின்றவுடன் வேட்டெஃகத்தை ஒருகையிலும், வெண்சுருட்டை ஒருகையிலும் வைத்துக்கொண்டார். பார்த்துப் போக வந்தவர்களை வெண்சுருட்டு வைத்திருந்த கையால் தடுத்து 'ஏய்', அந்தப் பக்கம் போகாதே... போ... போ... போ... என்று பெருமைக் குறைவாகப் பேசி விரட்டினார். நான் இவற்றையெல்லாம் அமைதியுடன் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, அந்தக் காவலரை விளித்து, நீ அவர்களைத் தடுத்து நிறுத்துவதில் தவறில்லை. எனக்கு வருத்தமும் இல்லை. ஆனால் அவர்கள் என் மதிப்பிற்குரிய வர்கள். அவர்களிடமானாலும் சரி, வேறு பொது மக்களிடமானாலும் சரி நீ மதிப்புக் குறைவாக நடந்து கொள்ளக்

கூடாது; அவர்களைப் போங்கள் என்று சொல்லிவிட்டால் அவர்களே போய்விடுவார்கள். நீ 'பீடி'யைப் பிடித்த கையோடு அவர்களைப் பிடித்துத் தள்ள வேண்டியதில்லை. மற்றப்படி நான் சட்டத்திற்குப் புறம்பானவன் அல்லன்; சட்டத்துக்குக் கட்டுப்பட்டே நான் இங்கு வந்திருப்பவன்; உங்களுக்கு ஏதும் தொல்லை தராமல் அமர்ந்திருப்பவன் என்று சிறிது கடுமை கலந்த குரலில் சொன்னேன்.

உடனே அவர், 'நீ இப்பொழுது யார் தெரியுமா? ஒரு குற்றவாளி (கைதி)! உன்னை நீ எல்லாரையும் போல எண்ணிக் கொள்ளக்கூடாது' என்று கூறினார். அவர் கூறியதில் இழிவான ஏளனக் குறிப்பு இருந்தது. அதைக் கேட்டவுடன், " ஆம் அப்பா, நான் குற்றவாளிதான்; ஆனால் திருடிவிட்டோ, கொலை செய்துவிட்டோ நான் சிறைக்கு வரவில்லை; நான் அரசியல் காரணாக - என் கருத்துக் காரணமாக இவ்வரசினரால் குற்றவாளியாக்கப்பட்டேன். என் கருத்துகள் வலிவடையு மானால் அப்பொழுது நீங்களெல்லாரும் குற்றவாளியாகக் கருதப் படுவீர்கள்!" என்றேன். ●

பேச்சுமொழிக்கும் போராடவேண்டும்!

தமிழ் மொழிக்கு அமைச்சர் அமைந்த இவ்வேளையில் தொலைக் காட்சியும் வானொலியும், கிழமை நாளிதழ்களும் தமிழ்மொழியின் அழகையும், செறிவையும் சிதைத்து வருகின்றன. எடுத்துக்காட்டாக ஒரு முன்னோடிக் கிழமை இதழில் ஆயிரம் வட சொற்களும், முந்நூறு ஆங்கிலச் சொற்களும், உருது, பாரசீகம், அரேபியம், தெலுங்கு, கன்னடம், இந்திச் சொற்கள் இருநூற்றைம்பதும், ஆங்கிலத் தொடர் அளவிற்கு அதிகமாகவும் கலக்கப்படுகின்றன. ஒரு 80 பக்கக் கிழமை இதழில் பக்கத்திற்கு 4 சொற்கள் 4 முறையாக 16 முறை வருகிறது. ஓர் இதழில் 25000 சொற்கள் உள்ளன என்றால் 12000 வரை அயல் மொழிச் சொற்கள் வருகின்றன. தமிழ்ச் சொற்கள் பல தேய்மானம் ஆகி வருகின்றன. 'காத்திரு' என்று கூறாமல் 'வெயிட் பண்ணு' என்கின்றனர். 'எங்கே வேலை செய்கிறாய்' என்பதற்கு மாறாக 'எங்கே ஓர்க் பண்ணுகிறாய்' என்கின்றனர். பயிற்று மொழிக்குப் போராடும் சங்கங்கள் பேச்சு மொழிக்கும் போராடச் சிந்திக்க வேண்டும். இல்லையேல் மக்கள் தொடர்பியல் வளர்ந்த இந்நாளில் தமிழ்மொழி ஏட்டு மொழியாகிவிடும்.

- முனைவர் ஆறு. அழகப்பன்.

மக்களவை

தமிழக மக்களுக்கு உண்மைத் தொண்டாற்றிய பாவலரேறு ஐயா அவர்களை இழிவுபடுத்துவதா?

அன்புள்ள ஆசிரியர் ஐயா அவர்களுக்கு,

வணக்கம்.

கடந்த 20.6.96 - அன்று சென்னை - அண்ணா கலையரங்கில் 'தாழ்த்தப்பட்டோர் கலை விழா'-நடந்தது. அதைத் 'தாழ்த்தப்பட்டோர் விடுதலைக் கூட்டமைப்பு' நடத்தியிருந்தது.

தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்கான அமைப்புகளின் தலைவர்கள் பலர் அதில் பேசினர். அ. மார்க்சு, இரவிக்குமார் போன்ற அறிஞர்களும் பங்கேற்று வாழ்த்துரையாற்றினர்.

வாழ்த்துரை பேசிய அ. மார்க்சு - அவர்கள் தாழ்த்தப்பட்டோர் விடுதலைக்கான செய்திகளையெல்லாம் நிரல்படத் தொகுத்துக் கூறினார்கள். இருப்பினும், இன்றைய தமிழ்த் தேசியச் சிந்தனை என்பதே வெள்ளாளச் சிந்தனையாக இருக்கிறது, என்றும், 'இன்குலாப், பெருஞ்சித்திரனார் போன்றோர் சிறுபான்மை மற்றும் ஒடுக்கப்பட்ட வகுப்புகளில் பிறந்தவர்களாயினும் அவர்கள் வெள்ளாளர்க்குக் கோவணமாகச் செயல்பட்டவர்களே!' என்றும், 'தமிழ்மொழி - என்று பொதுப் படச் சொல்லக் கூடாது, தமிழ் மொழிகள் என்றுதான் சொல்ல வேண்டும்' - என்றும் பலவாறாகப் பேசினார்.

நிகழ்ச்சிக்குச் சென்றிருந்த என்னால் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை. நம் அருந்தமிழாசான் ஐயா அவர்களை இந்த அளவில் அருவருப்பாகப் பேசுகிறாரே என்று மன அழுத்தமாக இருந்தது.

ஐயா அவர்களைப் பற்றித் தெரியாமல், அவர்களின் எழுத்துகளைப் படிக்காமல், அவர்கள் போராடிய போராட்டங்களை அறியாமல் அவர்தம் உறுதியான பொதுமை வாழ்க்கையைப் பற்றி உணராமல் மேலோட்டமாக அ. மார்க்சு அவ்வாறு கூறியுள்ளது மிகவும் தவறானது.

வெள்ளாளத் தன்மை என்று அவர் எதை வகுத்துக் கொள்ளுகிறார் என்று விளங்கவில்லை.

ஒருவேளை இந்தியத் தனமான பார்ப்பனியத்தையும், இந்துத்துவம் மற்றும் சாதியத்தையும் தாம் அவர் வெள்ளாளத்தனம் என்று குறிப்பிடுவாராயின் அத்தகைய வெள்ளாளத் தனம் என்பதை இம்மியளவும் ஏற்காதவராகவே ஐயா அவர்கள் கருத்தறிவித்தார்கள், எழுதினார்கள், பேசினார்கள், வாழ்ந்தார்கள்.

அத்தகைய அரும்பெறலாளரை இந்தச் சொற்களால் இழிவுபடுத்தியது மிகவும் கண்டனத்திற்குரியது.

வல்லரசியலாளர்க்கும், ஆளுமையர்க்கும் ஆன இந்தியத்தை ஒழிக்க வேண்டும் என்பது ஐயா அவர்களின் வாழ் நாளில் தொடர்ந்த செயலாகவே இருந்தது.

தமிழக விடுதலை மாநாடு மூன்று நடத்தி, அதற்காகப் பல காலம் சிறைக் கொடுமைகளை ஏற்றவர் ஐயா அவர்கள்.

இந்து மதம் எனும் இழி மதம் ஒழிக! - என்றும், தமிழர்கள் அனைவரும் இந்து மதத்திலிருந்து ஒட்டுமொத்தமாக வெளியேற வேண்டும் என்றும், இந்து மதத்தின் பக்கவேர்களான சங்கர, பிறமடங்களையும், ஆரியப் பார்ப்பனர்களின் நச்சுத் தனங்களையும் நேருக்கு நேர் நின்றும் எதிர்த்தவர் ஐயா அவர்கள்.

சாதியர்களாய்த் தமிழர் இருக்கிற கொடுமைகளைக் கடுமையாகச் சாடினார்கள் ஐயா அவர்கள்.

'சாதிக் கிறுக்கர்கள்' - என்று 1960-இலேயே சாதியை வளர்க்கிற ஆளுமைச் சாதிய உணர்வுகளைக் கடுமையாகச் சாடியிருக்கிறார்கள் ஐயா அவர்கள்.

'சாதிப் புழுக்கள் நெளிந்திடும் சாணித் திரளைகள் நாம்' - என்றும், **'சாதி ஒழிப்புக்கான திட்டம்'** - என்றும் பலபட எழுதி அவர்கள் சாதி ஒழிப்பில் கவனம் செலுத்தியது மட்டும் அல்லாமல் சாதி ஒழிப்புக்கெனப் பல்வேறு அமைப்புகள் நடத்திய நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டிருக்கிறார்கள்.

இந்துத் தன்மைக்கும், இந்தியப் பார்ப்பனியத் தன்மைக்கும் அடிமைப்பட்ட தமிழறிஞர்கள் தெ.பொ. மீனாட்சி சுந்தரம், வையாபுரி - போன்றவர்களைக் கடுமையாகச் சாடியிருக்கிறார்கள் ஐயா அவர்கள்.

மறைமலையடிகளாரைக் கூட மொழி அளவிலும் அவரின் தமிழ்ச் சிந்தனை வழியிலும் ஏற்றுக் கொண்ட ஐயா அவர்கள், அவரின் சிவனிய சிந்தனையையும், கருத்தியலையும் ஒப்புக் கொள்ளாமலும் சமயக் கொள்கைகளை எப்போதுமே மறுத்தும் எழுதிப் பேசி வந்திருக்கிறார்கள்.

அ. மார்க்சு அவர்கள் எதையெல்லாம் வெள்ளாளத்தனம் எனக் குறிப்பிடுகிறார்களோ அதையெல்லாம் மறுத்த உண்மைச் செயலாளர் ஐயா அவர்கள். தம் வாழ்நாள் முழுக்க எந்த அரசிடமும், ஆளுமையரிடமும் விட்டுக் கொடுக்காமலும் எதிர்த்தும் உண்மையாய் உழைத்த ஐயா அவர்களை அந்தப்படி அ.மார்க்சு இழித்துரைத்தது மிகத் தவறானது.

அ. மார்க்சு போன்று ஏழாயிரம் வருவாய்க்கும் மேலாய்ச் சம்பளம் பெற்றுக் கொண்டும், கிருத்துவ நிறுவனங்களிடையே பணம் பெற்றுக் கொண்டும், அறிவாய்ப் பேசுவதாய்ச் செருக்காக இயங்கியவரும் அல்லர் நம் பாவலரேறு ஐயா அவர்கள்.

தாம் செய்து கொண்டிருந்த அரசுப் பணியையும் தூக்கி எறிந்துவிட்டு வந்தவர்கள் ஐயா அவர்கள்.

எனவே, தாம் எண்ணுவதெல்லாம் அறிவு என்று பிதற்றும் அ. மார்க்சு எதையும் ஆழ்ந்து அறிந்து பேசட்டும்.

- செல்வம், சென்னை.

தென்மொழி அச்சகம் - அச்சுமுறை மாற்றம் !

தென்மொழி அச்சகம் எழுத்தச்சு முறையினின்றும் கதிரச்சு முறைக்கு மாற்றப் பெற்றுள்ளது. ஐயா அவர்கள் இருக்கும் போதே இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தென்மொழியின் மூவிதழ்கள் கதிரச்சு முறையிலேயே வெளியில் அச்சிடப்பெற்றன. தென்மொழிக்கெனக் கணிப்பொறி - கதிரெழுத்துக் கோப்பான் வாங்கப் பெற்றுச் சென்ற இதழே முதன் முதலின் தென்மொழி அச்சகத்தினின்றும் உருவாக்கம் பெற்று வெளிவந்தது. வழக்கம் போல் தென்மொழிப் பணிகள் தொடரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- ஆசிரியர், 'தென்மொழி'

செய்திகள்

(பாவலரேறு ஐயா அவர்கள் உடல் நலங் குன்றி மருத்துவ மனையில் இருந்த நிலையில், ஐயா அவர்கள் முன்னாப் பங்கேற்ற நிகழ்ச்சிகள் தொடர்பான செய்திகள் பல தென்மொழியில் வெளிவராமல் இருந்தன. கையெழுத்துப் படிகள் கோப்பில் ஐயா அவர்கள் எழுதிவைத்திருந்தனவும் விடுபட்டனவுமான அச் செய்திகள் ஈண்டு இடம்பெறுகின்றன. - ஆசிரியர்.)

1. எழில் வதனதாசு - சோபனா - வாழ்க!

தி.பி. 2025 சுறவம் 11 (24.1.94) ஆம் நாள் திங்கட்கிழமை, சென்னை 19, திருவொற்றியூர், கங்கா காவிரி திருமண மாளிகையில், நெடுநாள் தென்மொழி அன்பரும், பைந்தமிழ்ப் பாசறைத் தலைவரும், ஆகிய ம.தென்முகநம்பி - லில்லி இணையரின் அன்புமகன் செல்வன், த. எழில்வதனதாசு (பொறி. மின்பட்டயர் D.E.E.) அவர்களுக்கும், புதுவை புட்பா பெருமாள் அவர்களின் இளைய மகள் செல்வி சோபனா (கணி. அறி. கல். பட்டயர் D.C.S.E) அவர்களுக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் தலைமையில் திருவாட்டி தாமரை - பெருஞ்சித்திரனார் அவர்கள் திருமணம் செய்வித்தார்கள்.

மணமக்களை வாழ்த்தி, திருவாளர்கள் திருக்குறள் மணி, புலவர். இறைக்குருவனார், இறை. பொற்கொடி, கு. தெய்வசிகாமணி, ஜான் சவுந்தரராசன், அறிவுடை நம்பி, சு. அன்புக்குமரன், சுப. நீலன் ஆகியோர் நல்லுரை வழங்கினார்கள். திரு. தென்முகநம்பியின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

2. பாவாணர் பிறந்த நாள் விழா - ஈரோடு!

கடந்த தி.பி.2025 கும்பம் (14.2.94) திங்கட்கிழமை ஈரோடு, பழைய தெப்பக்குளம், திறந்த வெளிப் பாவாணர் அரங்கத்தில், உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், பாவரசு முடியரசனார் முத்தமிழ் மன்றம் சார்பில், பாவாணர் பிறந்த நாள் விழா சீரும் சிறப்புமாக நடைபெற்றது. விழாவிற்கு, உ.த.மு.க. பெரியார் மாவட்ட அமைப்பாளர் மானமிகு. தி.மு.அரசமாணிக்கனார் தலைமை தாங்கினார். திரு. குறிஞ்சியார் வரவேற்புரையாற்றினார். பாவலர்கள் தமிழ்க்குமரனார், சின்னப்பனார் ஆகியோர் வாழ்த்துப் பாக்கள் பாடினர். பாவாணர் புகழ் வாழ்த்தித் திருவாளர்கள் புலவர் பொதிகைச் செல்வனார்(புரட்சிகர உழவர்கள், உழவுத் தொழிலாளர் முன்னணி), பரம கிருட்டிணன், (தமிழர் தேசிய இயக்கம்) நிறைமதி, செங்கோலரசு ஆகியோர் உரை நிகழ்த்தினர். இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் சிறப்புரையுடன் விழா இனிது நிறைவுற்றது.

3. பாவலரேறு பெருஞ்சித்திரனார்க்கு, கன்னியாகுமரி மாவட்ட எழுத்தாளர் கழக வரவேற்பு :

தி.பி.2025, 22.2.94 மாலை 6 மணிக்கு, நாகர்கோவில் பெருமாள் திருமண்டபத்தில், நாகர்கோவிலுக்கு வருகை தந்த பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களுக்குக் கன்னியாகுமரி மாவட்ட எழுத்தாளர் கழகச் சார்பில் ஒரு வரவேற்பு நல்கப் பெற்றது. நிகழ்ச்சிக்கு, ஈகி, 'கன்னியாகுமரி' மணி தலைமை தாங்கினார். புலவர் ம.பகவதியப்பன் வரவேற்புரையாற்றினார். பாவலரேறு சிறப்புரைக்குப் பின், திரு. சிவ. சிவராசன் நன்றியுரை கூற நிகழச்சி சிறப்புற நிறைவுற்றது. நிகழ்ச்சியில் திருவாட்டி தாமரை பெருஞ்சித்திரனார் அவர்களும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

4. தேவ பிரசாது - பிந்து வாழ்க!

தி.பி.2025 கும்பம் 11 (23.2.94) அறிவன் கிழமை காலை 9 மணியளவில், கன்னியாகுமரி மா.வ.சுசீந்திரம், மாங்கல்யா திருமண மண்டபத்தில், குமரி மாவட்டம், கற்காடு திருவாட்டி இரமணி திருவாளர் அ. பொன்னையா ஆகியோரின் மகன், திருநிறை செல்வன் பொ. தேவ பிரசாது (கணினி பகுப்பாய்வாளர் எம்.ஐ.எசு, குவைத்) அவர்களுக்கும், சென்னை, இந்திய ரிசர்வ் வங்கி அதிகாரி, திருவாளர் சி.ஆர். குருநாதன், திருவாட்டி கிரேசி ஆகியோரின் மகள், திருநிறை செல்வி கு. பிந்து (மேலாளர், கதிரவன் தொலைக் காட்சி (சன். டி.வி) சென்னை, அவர்களுக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் தலைமையில் தமிழ்த் திருமணம் சிறப்புற நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி முனைவர். செ. செல்வநாதன் (பதிவாளர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், நெல்லை), திரு. மு.த. வசீலன் (நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை), திரு. இரா. திருமாவளவன் (மாநில அமைப்பாளர், தலித் பேந்தர் இயக்கம்), பூ. சந்திரபோசு (மாநில அமைப்பாளர், ஈகி இமானுவேல் பேரவை) ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியில் மணமகன் தமையனார் திரு. அம்பா சங்கர் நன்றி நவில நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

5. சட்டப் பேரவை முன் முற்றுகைப் போராட்டம் :

தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தை நடைமுறைப் படுத்தக் கோரி, கல்வி மானியக் கோரிக்கையின் போது, சட்டப் பேரவை முன், கடந்த ஏப்பிரல் 18 ஆம் நாள் காலை 9 மணியளவில் தமிழறிஞர்களின் முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது. போராட்டம் 'தலைநகர்த் தமிழ்ச் சங்கம்' சார்பில் நடைபெற்றது. சிம்சன் அருகில் உள்ள பெரியார்

சிலையிலிருந்து தொடங்கித் தமிழறிஞர்கள் அணி அணியாக ஊர்வலமாகச் சென்று சட்டப் பேரவை முன் முற்றுகைப் போர் புரிய முற்பட்டனர். ஆனால், காவலர்கள் போராட்டத்தைத் தடுத்துப் போராட்டத்தில் தலைநகர்த் தமிழ்ச் சங்கத் தலைவர், பேரா. இரா. சேது, பொதுச் செயலர் புலவர் த. சுந்தரராசன், துணைப் பொதுச் செயலர் ப. சாத்தன், பாவலரேறு பெருஞ்சித்திரனார், பேரா. சாலை இளந்திரையனார், பேரா. சாலினி இளந்திரையனார், தாமரை பெருஞ்சித்திரனார், புலவர் வி.பொ. பழனிவேலனார், முனைவர். திருமுருகனார், மா. பூங்குன்றன் உள்பட முந்நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு, காவலர்களால் தளை செய்யப்பட்டு மாலை விடுவிக்கப் பெற்றனர்.

6. மூதறிஞர் வ.சுப. மாணிக்கம் நினைவும், மொழிப் போர் மறவர்களுக்குப் பாராட்டும், சான்றிதழ் வழங்கலும் : சென்னை

சென்ற 24.4.94 அன்று சென்னை, தேவநேயப் பாவாணர் நூலக அரங்கத்தில், மாலை 5 மணியளவில் மூதறிஞர், வ.சுப. மாணிக்கனார் நினைவு விழாவும், மொழிப்போர் மறவர்களுக்குரிய பாராட்டும், சான்றிதழ் வழங்கு விழாவும் தலைநகர்த் தமிழ்ச்சங்கம் சார்பில் நடைபெற்றன. விழாவிற்குப் பேரா. இரா. சேது அவர்கள் தலைமை தாங்கினார். புலவர் த. சுந்தரராசன் வரவேற்புரையாற்றினார். பாவலரேறு பெருஞ்சித்திரனார், முனைவர் இளவரசு, பாவலர் சுரதா, புலவர் ப. சாத்தனார், வ.சுப.மா. தொல்காப்பியன், புலவர் கண்ணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். பின்னாத் தலைநகர்த் தமிழ்ச் சங்கம் கடந்த 18.4.94 அன்று நடத்திய சட்டப் பேரவை முன் முற்றுகைப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைப்பட்ட தமிழ் மறவர்களுக்குப் பாராட்டிதழ்கள் வழங்கப் பெற்றன. இறுதியில் நெல்லை இராமச்சந்திரன் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

7. மொழிச் சிறுபான்மையினர் உரிமைகள் சீரமைப்பு மாநாடு - சென்னை :

'தமிழ் மட்டுமே தமிழகத்தின் ஆட்சிமொழி' என்ற சட்டம் 1956 - இல், பேராயக் கட்சி ஆட்சியில் நிறைவேற்றப்பெற்றது. அதன்பின், 1968 வரை அச்சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப் பெறாததைக் கண்டு, அன்றிருந்த தி.மு.க. ஆட்சியில், 'இன்னும் ஐந்தே ஆண்டுகளுக்குள் அஃதாவது 1973-க்குள் தமிழை ஆட்சி மொழியாகச் செயல்படுத்த வேண்டும்' என்று சட்டப் பேரவையில் 23.1.68-இல் தமிழக அரசு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. ஆனாலும் இச்சட்டம் இன்று வரை

அரசால் நடைமுறைப் படுத்தப் படாததுடன், எல்லா நிலைகளிலும், அரசுத் துறைகளிலும் ஆங்கில மொழியே நடைமுறையில் உள்ளது அனைவரும் அறிந்ததே.

இந்நிலையில், தமிழகத்தில் மொழிச் சிறுபான்மையினராக அங்கங்கே குடியேறி வாழ்ந்து வரும் தெலுங்கர், கன்னடர், மலையாளியர், உருது மொழியினர் ஆகியோரின் மொழிகளைத் தமிழகத்தின் வெவ்வேறு பகுதிகளில் ஆட்சி மொழிகளாக 29.12.93-இல் அறிவித்துள்ளது, தமிழக அரசு. இது தொடர்பாக எழுந்துள்ள அனைத்துச் சிக்கல்களுக்கும் தீர்வுகாண 'அறிவியக்கப் பேரவை' சார்பில் அதன் அமைப்பாளர் பேரா. சாலை இளந்திரையன் அவர்கள் தலைமையில், சென்னை கோபாலபுரம், ஊரக தொழில் வளர்ச்சி நடுவத்தில் கடந்த 30.4.94-இல் 'மொழிச் சிறுபான்மையினர் உரிமைகள் சீரமைப்பு மாநாடு' ஒன்று அன்று காலை 10 மணியளவில் தொடங்கி நடைபெற்றது, மாநாட்டைப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தொடங்கி வைத்தார். முனைவர். சாலினி இளந்திரையனார் வரவேற்புரையாற்றினார். மாநாட்டில் திருவாளர்கள் பழ. நெடுமாறன், ஈகி.பி.எசு. மணி, கரூர் குப்புசாமி, பேரா. திருமுருகன், இறைவிழியன், நகைமுகன், பெ. மணியரசன், அரு. கோபாலன், சுப. வீரபாண்டியன், மா. பொழிலன், அரணமுறுவல், ஆகியோர் கருத்துரையாற்றினர். அறிவியக்கப் பேரவைச் செயலாளர் மு. மணிமார்பன் நன்றியுரையுடன் மாநாடு, 8 மணியளவில் நிறைவுற்றது. (மாநாட்டில் நிறைவேற்றப் பெற்ற தீர்மானங்கள் 'தமிழ்நிலம்' இதழ் எண்: 171-இல் வெளிவந்துள்ளன. அன்பர்கள் அங்கு கண்டு கொள்க.

(தொடரும்)

செய்திகள்

(தூ.நா.பாளையம்) பெரியார் தமிழர் எழுச்சி மன்றம்,

தூ.நா.பாளையம் காமராசர் திடலில் மொழிப்போர் ஈகி முத்து அரங்கில் ஆடவை 30 ஞாயிறு (14.7.96) இரவு 7 மணிக்குத் தந்தை பெரியார் தமிழர் எழுச்சி மன்றச் சார்பில் பாவலரேறு முதலாண்டு நினைவு நிகழ்ச்சி திரு. தூ.வ. சண்முகம் தலைமையிலும், திருவாளர்கள் வீ. சண்முகம், தி. பழனிச்சாமி, இரா. குணசேகரன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. திரு. தூ.கி. தேவராசு வரவேற்க, திரு. சு.விசுவநாதன் ஆண்டறிக்கை படித்தார். திரு. தூ.ந. அருணகிரி தீர்மானத்தை மொழிந்தார். பேரா. அப்துல்காதர் சிறப்புரையாற்றினார். திருவாளர்கள் தூ.இரா.காளியப்பன், இரா. முருகானந்தம், மா.

அர்த்தநாரீசுவரன், தூ.ச.சுந்தரராசு, பி.இரா. அடலெழிலன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். திரு.சு. பாலகணேசன் நன்றி நவின்றார்

வேலூர் - தமிழியக்கம் :

வேலூர் - தமிழியக்கத்தின் சார்பில் கடந்த கடகம் 5 காரி (20.7.96) மாலை 6 மணிக்கு வள்ளல் மாசிலாமணி மாணவர் விடுதியில், பாவேந்தர் விழாக் கருத்தரங்கம் திருவாட்டி இரத்தின விசயா தலைமையிலும் அன்னை தாமரை பெருஞ்சித்திரனர் அவர்களின் முன்னிலையிலும் நடைபெற்றது. திரு. செந்தமிழ்க்கோ அறிமுகவுரையும், திரு. செ.ப.வெங்கடேசன் தொடக்கவுரையும் நிகழ்த்தினர். திருவாட்டி இறை. பொற்கொடி பாவேந்தரின் தமிழ்த் திறங் குறித்து உரையாற்றினார். முனைவர் பா. வளனரசு, பாவேந்தர் படத்தைத் திறந்துவைத்து 'பாவேந்தர் பாத்திறனும் மொழியுணர்வும்' என்னுந் தலைப்பில் சிறப்புரையாற்றினார். திரு. ஞானவேலு என்ற அரிமா நன்றி நவின்றார்.

கடகம் 6 ஞாயிறு (21.7.96) முற்பகல் 10.30 மணிக்கு செல்வி சி.க. மண்டோதரி தலைமையில் பாவாணர் விழாக் கருத்தரங்கம் நடைபெற்றது. திரு. ஆ.மா. சகநாதன் அறிமுகவுரையும், திரு. செந்தமிழ்க்கோ தொடக்கவுரையும் ஆற்றினர். திரு. சி.செழியன் தமிழியக்கம் பற்றிப் பேசினார். முனைவர் பா. வளனரசு 'செந்தமிழ் ஞாயிறு மொழிக்காற்றிய தொண்டு' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். பாவலர் பொன். செல்வக்குமார் நன்றி நவின்றார்.

அன்று மாலை சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் - அண்ணல் அம்பேத்கர் விழாக் கருத்தரங்கம் திரு.வி.சி. ஆறுமுகம் தலைமையிலும், நந்த சிவலிங்கம் முன்னிலையிலும் நடைபெற்றது. திரு. செந்தமிழ்க்கோ அறிமுகவுரையும், திரு. ஆ. பதுமநாபன் தொடக்கவுரையும் ஆற்றினர். திரு. கே.டி.கே. தங்கமணி சிறப்புரையாற்றினார். திரு. கா. விசுவநாதன், முனைவர் முத்து குணசேகரன் ஆகியோர் அம்பேத்கர் பணிகள் பற்றி உரை நிகழ்த்தினார். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன. திரு. நா.தேவன் நன்றி நவின்றார்.

சென்னை - தலைநகர்த் தமிழ்ச்சங்கம் கண்டன ஆர்ப்பாட்டம்:

சென்னை - வேப்பேரி 'செவன்து டே அட்வெண்டிசு' பதின்ம (Matriculation) மேனிலைப் பள்ளியில், தமிழ் பேசிய மாணவன் தண்டிக்கப் பட்டதை எதிர்த்துத் தலைநகர்த் தமிழ்ச் சங்கம் பல்வேறு தமிழ் நல அழைப்புகளின் ஒருங்கிணைப்பில், அப் பள்ளியின் முன் 26.7.96 அன்று பேரா. சேது தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம்

நடத்த ஆவன செய்தது. அன்று காலை குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே தவுட்டன் பேருந்து நிலையத்தின் அருகில் காவல்துறையினர் தமிழறிஞர்கள் மற்றும் ஆர்வலர்களை அணியணியாகத் தளைப்படுத்தி வேப்பேரிக் காவல் நிலையத்தில் சிறை வைத்தனர். பனப்பாக்கம் தென்மொழி பயிலுநர் அவை புரட்சிகர இளைஞர் முன்னணி, உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் சார்பில் முந்நூறு பேர் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு வந்திருந்தனர். தென்மொழி அவையத்தின் சார்பில் புலவர் இறைக்குருவனார் முதலானோர் பங்கேற்றனர்.

தமிழ்ச்சங்கச் செயலர் புலவர் த. சுந்தரராசன் உள்ளிட்ட பலரைப் பிடரியைப் பிடித்துத் தள்ளிய காவல்துறைத் துணை ஆணையர் மீதும், இழிவுறப் பேசிய காவல் மூடுந்து ஓட்டுநர் மீதும் அரசு கடும் நடவடிக்கை எடுக்கக் கோரி, சிறைப்பட்டோர் யாவரும் உண்ணாநோன்பு மேற்கொண்டதோடு, காவல்நிலைய வளாகத்தில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாலையில் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

நெல்லிக்குப்பத்தில் பாவலரேறு முதலாண்டு நினைவு நிகழ்ச்சி :

தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டம் நெல்லிக்குப்பம் - புதுத் தெருவில் ஒடுக்கப்பட்டோர் கலை இலக்கிய நடுவத்தின் சார்பில் கடகம் 12 காரியன்று (27.7.96) பாவலரேறு முதலாண்டு நினைவு நிகழ்ச்சி திரு ஆரோ. செந்தமிழன் அவர்கள் தலைமையிலும் அன்னை தாமரைபெருஞ்சித்திரனார், சிங்க. மோகன்தாசு ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. திரு. எசு.எம். தண்டபாணி வரவேற்றுப் பேசினார். திரு. வீ. அழகரசன் தொடக்கவுரையாற்றினார். பேரா. சுப. வீரபாண்டியன், கோ.சுகுமாரன், பாவலர் தமிழகன், திரு. பாண்டியன், திரு. அசேன் முகமது ஆகியோர் உரையாற்றினர். திரைப்பட நடிகர் பேரா. பெரியார்தாசன் நிகழ்ச்சிக்கு வருகைதந்து கலந்து கொண்டு உரையாற்றினார். திரு. இர.கணேசன் நன்றி நவின்றார்.

அன்னை தாமரை பெருஞ்சித்திரனார் உரையாற்றும் போது 'தென்மொழி' நெல்லிக்குப்பத்தில் தொடங்கப்பட்டதை நினைவு கூர்ந்தார். அப்துல் ரவூப்பின் தந்தை அசேன் முகமது பேசும் போது தம் மகனின் இறுதி நிகழ்ச்சி பற்றிக் கூறினார். உடல் கருகிய நிலையிலும் உணர்வு கருகாமல் 'இன்று நான் நாளைக்குத் தமிழகம்' என்று கூறியபடி உயர் துறந்ததைக் குறிப்பிட்டார்.

ஈரோடையில் பாவலரேறு முதலாண்டு நினைவு நிகழ்ச்சி :

ஈரோடையில் பாவரசு முடியரசனார் முத்தமிழ் மன்றம், உலகத்தமிழின முன்னேற்றக் கழகம் ஆகியவற்றின் சார்பில் பாவலரேறு முதலாண்டு நினைவு நிகழ்ச்சி - முடியரசனார் இலக்கிய விழா கடகம் 13 ஞாயிறு (28.7.96) அன்று ஆசிரியர் குடியிருப்பு ஊ. ஒ. தொடக்கப் பள்ளியில் பாவலர் இரா. வடிவேலனார் தலைமையில் நடைபெற்றது. புலவர். தி.மு.அரசமாணிக்கனார் வரவேற்புரையாற்றினார்.

புலவர் வே. தமிழ்மாறன், திரு. கி. வே. பொன்னையன், 'பாவேந்தர்' இராமலிங்கம், புலவர் பொதிகைச் செல்வனார். திரு. குறிஞ்சி, புலவர் திருநாவுக்கரசு, திரு. அ.ச. பாரி ஆகியோர் பாவலரேறு அவர்களைப் பற்றியும், முடியரசனார் பற்றியும் பல்வேறு தலைப்புகளில் உரையாற்றினர்.

சுவடி தமிழ்வழிக் கல்வி நிலையம் தொடக்க விழா - ஈரோடை:

சுவடி தமிழ்வழிக் கல்விநிலையத் தொடக்க விழா ஈரோடைக் கருங்கல் பாளையம் இராசகோபால் தோட்டத்தில் கடகம் 13 (28.7.96) ஞாயிறு மாலை 7 மணிக்கு முனைவர் க. இராமச்சந்திரன் தலைமையிலும், திருவாளர்கள் என். சிவசுரேந்திரன், பரஞ்சோதியார், கௌதமன், அ.மோகன்காந்தி, சுரேசுபாபு ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. திரு. அசுரன் வரவேற்றார். திரு. வி.குமார் தொடக்கவுரையாற்றினார். திரு. கனல் அறிக்கை படித்தார். பேரா. பரமசிவம் வாழ்த்துரை வழங்கினார். அமைச்சர் என்.கே.கே. பெரியசாமி பள்ளிக் கட்டடத்தையும், திருவள்ளுவர், பெரியார், பாவலரேறு ஆகியோர் படங்களையும் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார். சட்டமன்ற உறுப்பினர் நா. பெரியசாமி கலை நிகழ்ச்சிகளைத் தொடங்கிவைத்துப் பேசினார். சுவடி தனிப் பயிற்சி மாணவர்களின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. திரு. இளவேனில் நன்றி நவின்றார்.

நாரண துரைக்கண்ணனார் மறைவு

முதுபெரும் எழுத்தாளரும் தமிழறிஞருமான திருவாளர் நாரண துரைக்கண்ணனார் அவர்கள் அண்மையில் இயற்கையெய்தியமை யறிந்து வருந்துகிறோம். மறைத்திரு மறைமலையடிகளார் தம் மாணாக்கராக இருந்து செந்தமிழும் சிவனியக் கொண்முடிபும் பயின்ற துரைக் கண்ணனார் தாளிகைத் துறையிலும் புதினப் படைப்பிலும் ஈடுபட்டுப் பணியாற்றிய சிறப்புக்குரியவர். அவர்தம் பிரிவால் வருந்தும் குடும்பத்தார்க்கும் அன்பாகளுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- ஆசிரியர், 'தென்மொழி'

காத்திருந்த அந்த ஐந்து நாட்களில்......

பெறற்கரிய இன்னுயிர் நீங்கிய பின்பும், அவ்வுயிர் தாங்கியிருந்த உடலை நீள்வாக்கில் அமைக்கப்பெற்ற நிலையில் அந்த இருட்டறைக்குள்ளேயே ஐந்து நாட்களாய் அமைதிகாத்துக் கொண்டிருந்த அந்த வேளையிலே... உலக உருண்டையின் மறுபக்கம்..... சூன்-10-1995.

இங்குக் காரி இரவு 8 மணியளவு! சரியாக இதே சமயம் தமிழகத்தில் ஞாயிறு காலை 8.30 மணியளவு! இராமச்சந்திரா மருத்துவமனையிலே எம் அரும்பெறல் இன்னுயிரை விட்டுக் கொடுத்துவிட்டு, மேற்கொண்டு பேரமைதியைத் தழுவியிருந்த நேரத்திலே, இங்கு அரியானா மாநிலத்திற்குள் இரவு உணவாக உப்புமாவைச் சுவைத்துக் கொண்டிருந்த நேரம்! திடுமென வந்த அந்தத் தொலைபேசிச் செய்தி வந்து ஒரு பெருங் குலுக்கு குலுக்கியது. ‘அப்பா!’ என்று அங்கிருந்த இருக்கையில் வீழ்ந்தேன். அவ்வளவுதான்! இருக்கைக்குள்ளேயே புதைந்து கொண்டேன். அனைத்து இயக்கங்களும் நின்றுவிட்டன. வெளியில் இருட்டு! வாழ்வும் இருட்டுக்குள் சென்று விட்டது. இருக்கைக்குள் என்னைப் புதைத்துக் கொண்டே ‘ஐந்து நாட்களுக்கு நாம் அங்குப் போய் சேரும் வரை காப்புப்படுத்தும் செய்தி’யைப் பற்களைக் கடித்து கொண்டே அறிந்து கொண்டேன்.

நெஞ்சடைத்த நிலையில் வெளியிருட்டு விலகிக் கொண்டிருந்தது. உள்மனமோ இருட்டுக்குள்ளேயே என் நெஞ்சை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டிருந்தது. பொய்யாகப் போக வேண்டிய அந்தச் செய்திக்குக் கற்பனைக் காரணத்தை அவ்வப்போது போட்டுக் கொண்டிருந்தது. இருட்டு முற்றிலுமாக விலகிய பின்பு, இருக்கையினின்று மெல்ல எழுந்து உடல் இறுக்கத்தை மட்டும் விடாது இரு கைகளாலும் இறுக்கிப் பிடித்துக் கொண்டு, பலகணி வழியாகத் தெரிந்த அந்த ‘இலெமென்’ மலையைப் பார்த்தேன். அந்த நிமிர்ந்த நெடிய வன்மலை, எளிய மண்மலை போல், பிடித்துத் தள்ளினால் பொலபொலவெனக் கொட்டுவது போல் தெரிந்தது. அடுத்து வானை அப்படியே சுருட்டித் தள்ளிவிடுமளவிற்கு மிக அருகில் - தொடு தொலைவிற்குக் காணப்பட்டது. பிறகு மெல்ல வெளியிலே வந்து வான்வழியே என் கண்களை ஓடவிட்டுத் தமிழகத்திசையைத் தேடினேன். கடல் வழியாகச் சென்று தமிழகத்தைக் காண வேண்டுமெனில் மேற்கைப் பார்க்க

வேண்டும். நிலப்பகுதியாகச் சென்றடைய வேண்டுமெனில் கிழக்கைப் பார்க்க வேண்டும். இருதிசையையும் ஒவ்வொன்றாக நோக்குகையில் கிழக்கிலே மலையிடுக்கின் வழியே தோன்றிக் கொண்டிருந்த கதிரவன் அப்படியே கையிலே பிடித்து வீசி எறிந்து விடுவது போன்று சிறு தீப்பந்தமாய் காணப்பட்டது. 'என் தந்தையில்லா இந்த உலகிற்கு எப்படி உன் ஒளியை வீசப் புறப்பட்டு விட்டாய்? உன் ஆற்றல் மிகுந்த ஒளியால் எம் வாழ்வின் இருண்டுபோன நிலையை விலக்கமுடியாத நீ ஏன் வருகிறாய்?' என்று என் உள்ளம் அன்றைய கதிரவனுடன் குமுறிப் பேசுவதை உணர்ந்தேன். இந்த வானும் மலையும் கதிரவனும் நமக்குத் தொடர்பில்லாத வேறு அயல் உலகினர் என்று அதே இருண்ட உள்ளத்தைப் பிடித்துக் கொண்டு இல்லம் புகுந்தேன். காரி இரவிலிருந்து திங்கள் காலை 9 மணிவரை செல்லுகைச் சீட்டு அலுவலகம் திறக்காது என்ற கசப்புச் செய்தியுடன், பெண்ணுக்குப் புகவு (விசா) எடுக்க 'சான்பிரான்சிசுகோ' வரை சென்ற பிறகுதான் அயலக வானூர்தியை பிடிக்க வேண்டும். அதுவும் தமிழகம் வரை தடையில்லாத வானூர்திச் சீட்டு பெறவேண்டுமெனின், செவ்வாய்க் காலை 10 மணியளவிற்குத் தான் தூசானை விட்டு கிளம்ப வேண்டும் என்ற உறுதிச் செய்தி சீட்டு அலுவலகப் பணியாளர் வழியாக வந்து இடும்பை கொடுத்தது.

செரித்துக் கொள்ளவே முடியாத பல செய்திகளை அடுக்கடுக்காகத் தாங்கப் பெற்று 95 அகவையினளாக வீட்டிற்குள்ளேயே நெஞ்சைப் பிடித்துக் கொண்டு துளிதுளியாய் இயங்கிக் கொண்டே, வழக்கமாக உள்ளத்துள்ளதுடன் அடுக்கி வைக்கும் பெட்டிகளை உள்ளறைக்குள்ளிருந்து மெல்ல இழுத்து, மெல்ல ஒவ்வொரு துணிமணியாய் அதற்குள் போட்டு அணியப்படுத்திக் கொண்டிருந்தேன். ஞாயிறு, திங்கள் பிறகு செவ்வாய் காலை 10 மணிவரையிலும், இரண்டு மூன்று 'பிறவி'யே முடிந்த கணக்கில் உண்ணமுடியாது உண்டு கொண்டும், நடக்க முடியாது நடந்து கொண்டும் இருண்ட வாழ்விலே பேச விரும்பாமல் ஊமையைப் போல் நகர்ந்து கொண்டிருந்தேன். 'எப்படியோ' இயங்கிக் கொண்டிருக்கின்ற இந்த உயிரின் உள்ளம், இருண்ட உலகிற்குள் இயக்கமின்றிக் காத்துக் கொண்டிருக்கின்ற என் தந்தையாரை எண்ணிப் பிசைந்த நிலையில் சுடுநீரை விடுகின்ற செங்கண்களைத் துடைத்துக் கொண்டே செவ்வாய்க் காலை வரை கடத்தினேன். செவ்வாய்க் காலையும் வந்தது. இப்போது தமிழகத்தில் செவ்வாய் இரவு! சரியாக 12.30 மணிநேரம் முன்னே செல்கிறது தமிழகம். மருத்துவமனைக் கணக்குப்படி 2 1/2 நாட்கள் கடந்தன.

எங்கிருந்தோ வந்த ஒரு வேக உணர்வு செவ்வாய்க் காலையிலே கசந்து போன அந்த வீட்டைத் தள்ளிக் கொண்டு வெளியே வந்தது. தூசானில் பிடித்த வானூர்தி ஒரு மணிநேரமாக அரிசோனா

தலைநகரமான போனிச்சை (Phoenix) அடைந்தது. நம் 'தானி' நினைவிற்கு வந்தது. கால்களுக்கு மட்டும் இசைவு கொடுத்திருந்தால் நெடுக ஓடிப்போய் இந்நேரம் தமிழகத்தையே அடைந்திருக்கும். அத்துணை வேகத்தையும் அடக்கிக் கொண்டிருந்த நிலையில் அடுத்த வானூர்தி போனிச்சிலிருந்து 2 மணிநேரமாகச் சான்பிரான்சிசுகோ (San Francisco)வை அடைந்தது. இங்கு இன்னொரு வகையான தண்டனை! புகவுச்சீட்டு அலுவலகம் சென்று புகவுச்சீட்டுப் பெற்றுப் பின்பு கடுமையான பசிநேரத்தில் சாப்பிட்டே ஆக வேண்டிய கட்டாயத்தில் ஒரு சீன விடுதிக்குள் நுழைந்து இரண்டு வாய்ச் சோறு உண்கையில், அப்பாவின் குரல் அன்று சொன்ன சொற்கூட்டங்களுடன் ஒலித்தது. அப்பாவின். அப்பா காலமாகிய சமயம். இதேபோன்று எல்லோரும் சென்னையிலிருந்து சேலம் புறப்பட்டுப் பின்பு சேலத்திலிருந்து சமுத்திரம் என்ற ஊருக்குள் நுழைவதற்கு முன் விடுதி ஒன்றுக்குள் நுழைந்து எல்லோருமாக வருத்த முகங்களுடன் அமர்ந்தபோது "அழுவதற்குக் கூட ஆற்றல் வேண்டாமா? அங்கே போய்ப் 'பசி' என்றால் எப்படிச் சாப்பிடக்கூடிய சூழல் இருக்கும்? சாப்பிடுங்கடா.." பதினான்கு ஆண்டுக்கு முன் கூறிய அப்பாவின் குரல் ஒலியில் சிறிது உணவு உள் தள்ளினேன் என்றாலும், துளி ஆற்றல் பெற்றபின் உணவு உட் செல்ல மறுத்துத் தொண்டையும் அடைத்துக் கொண்டது. இதற்குப்பின் சான்பிரான்சிசுகோ வானூர்தி நிலையத்திலேயே 5.30 மணி நேரம் அடுத்த அயலக வானூர்திக்காகக் காத்துக் கொண்டிருந்த நிலையில் வந்தது சிங்கப்பூர் வானூர்தி! இது 1973 - இல் அப்பா முதல் முறையாக வெளிநாட்டுச் செலவு மேற்கொண்டபோது சென்ற முதல் வானூர்தி! இந்த வானூர்தி அடையாளக்குறி 22 ஆண்டிற்கு முந்தைய நாட்களை நினைவூட்டியது. முதன் முறையாக அப்பா ஏறி அமர்ந்த அதே உணர்வில் ஏறி அமர்ந்தேன். அவர் எப்படியெல்லாம் ஒவ்வொன்றாகத் தம் கண்களில் படம் பிடித்திருந்திருப்பார் என்றே என் கண்கள் எல்லாவற்றையும் நோக்கின.

சான்பிரான்சிசுகோவிலிருந்து வானூர்தி பசுபிக்குப் பெருங்கடல் கடந்து 'ஆங்காங்'கை நோக்கிப் புறப்பட்டது. வானூர்தி மேலே செல்லச் செல்ல நில உலகம் சிறுமை அடைந்தது போலவே - வானூர்திப் பலகணி வழியே பெருங்கடல் சிறுநீரோட்டமாய் தெரிந்தது போலவே - என் மனம் அவற்றைச் சிறுமையாகவே புறக்கணித்தன; பின்பு மெல்ல மெல்லக் கீழே தெரிந்த பஞ்சனைய மேகக் கூட்டங்களையும், கீழ் வட்டத்தில் செருகியிருந்த வானையும் வேண்டா விருப்புடன் பார்த்துவிட்டு, என் தந்தையின் உயிரை விலக்கியிருந்த அந்த நிலவுலகைக் காணவும் கசந்துகொண்டு வான்வெளியிலே வானூர்திக்குள்ளிருந்து குமைந்து கொண்டிருந்தேன்.

பன்னிரண்டரை மணி நேரக் கசப்புக் கனப்புடன் 'ஆங்காங்' வந்தது. இது முதல்முறையான புதிய வழி என்பதால் இந்த நிறுத்தமும் புதியது. என்றாலும், வானூர்திப் பலகணிவழியே தெரிந்து கொண்டே வந்த 'ஆங்காங்' வானுயரக் கட்டிடங்கள் இரவில் பொன் நகைகளை உடல் முழுக்க அணிந்து கொண்டு ஒளிர்ந்து கொண்டிருந்தன. அந்தப் பொன்னொளிகள் என் கண்களுக்குள் விழுந்து சுட்டெரித்தன. என் அழுது வீங்கியிருந்த கண்கள் பிறகு அந்த வானுயரக் கட்டிடங்களைப் புறக்கணித்து அமைதி கொண்டன. மனம் மட்டும் தமிழகத்திற்குள்ளேயே வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அந்த வானூர்தி நிலையத்தில் கடத்திய ஒரு மணிநேரத்தில், எஞ்சிய செலவு நேரக் கணக்கையே திரும்பத் திரும்ப போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தது என் மூளை! ஒரு மணி நேர ஓய்விற்குப் பின்பு அதே வானூர்தி சிங்கப்பூர் நோக்கிப் புறப்பட்டது. 5 1/2 மணிநேரக் கசப்புச் செலவை தொடர்ந்து, ஏக்கமும் கூடவே தொடங்கியது.

வானூர்திக்குள் அமர்ந்திருந்த நிலையிலே அவ்வப்போது உலக வரைபடத்துடன் வானூர்தி செல்லும் திசையை வானூர்திக்குறியுடன் காட்டிக் கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டிருந்தேன். வானூர்திக்குறி சிங்கப்பூரை நோக்கிச் சென்று கொண்டிருந்த வேகத்திலேயே என் மனமும் சென்று கொண்டிருந்தது. இப்படியாகவே சிங்கப்பூர் வந்தடைந்தது வானூர்தி! நிலையத்தில் ஆங்காங்கு தெரிந்த தமிழ் முகங்களின் கண்கள் வருத்தம் உசாவி என்னை நோக்குவது போல் உணர்ந்தேன். பகலில் வந்து சேர்ந்த இந்த வானூர்திக்குப்பின் வேறு ஒரு வானூர்தியில் இரவுதான் புறப்படவேண்டும். சிங்கப்பூர் வானூர்தி விடுதிக்குள்ளேயே தங்கி எல்லோரும் களைப்பில் உறங்க, நான் மட்டும் விழித்து விழித்து, வீங்கிப் போயிருந்த என் முகத்தை மேலும் மேலும் கண்ணீரால் கழுவிக் கொண்டிருந்தேன். உடல்களைப்பும் மனச்சுமையும் இனி ஒரு கணமும் தாங்கமுடியாது தன்னிலை மறந்து குற்றுறக்கத்திற்குள் விழுந்து.... திடுமென எழுந்து சென்னைக்குப் புறப்பட்டது மனம். சென்னை செல்லும் வானூர்திக்குள் நுழைந்தவுடன் மனம் ஏனோ பின்வாங்கியது. திரும்பவும் உலக நிலப்படத்துடன் வானூர்திக்குறி சென்னையை நோக்கி நகர்ந்தது. இனி நினைப்பதற்கெல்லாம் என் மனம் செயல்படாது கல் போல் இறுகிக் கொண்டது. வானூர்திக்குள் என்னைச் சுற்றிய பகுதிகள் இருட்டாகத் தெரிந்தன.

'எப்படிச் சென்னைக்குள் இறங்குவது?.. வேண்டாம்.. வேண்டாம் நான் போக மாட்டேன். எனக்கு எங்கும் போக வேண்டாம். என் அப்பா எங்கு என்னை வரவேற்க, வெற்றிலைப் பெட்டியைத் திறந்து சுண்ணாம்பு தடவிக் கொண்டே என்னைப் பார்த்து

கொண்டிருக்கின்றாரோ அங்குதான் இறங்குவேன்.' என்று என் மனம் எவரிடமும் கூறாமல் அடம்பிடித்துக் கொண்டிருந்தது. 3 1/2 மணிநேரத்தில் வேண்டாத சென்னை விரைவில் வந்து விட்டது போல் உணர்ந்தேன்.

இது வானூர்தி நிலையம். கால் கடுக்க நிற்கும் கண்காணிப்பு வரிசையிலே கூட நிற்க விடாது, 'தென்மொழி' அட்டை தாங்கி முன் ஏற்பாட்டு அமைப்பு எங்களை முன்னுக்கு இழுத்தது. இவ்வளவு விரைவில் வெளியிலே செல்வதா?.. வானூர்தி நிலைய வாயிலில் வழக்கமாக நின்று வரவேற்கும் அந்த வெள்ளுடை உருவம் பெறாத அந்த மக்கள் அலைகளுக்கு இடையே நைந்து போன நிலையில் முன் வரிசையில் கண்ட அண்ணனை ஓடிப்போய் கட்டி, அத்தனை நாட்கள் அடக்கி வைத்திருந்த கண்ணீரையும், நெடும் பயணம் முழுவதும் தொண்டைவரை நிறுத்தி வைத்திருந்த அழுமொழிகளையும் கொட்டினேன். தொலைபேசி வழி வந்து கலக்கிய அரை உறுதிச் செய்திக்குப்பின், வானூர்தி நிலையத்திற்கு வந்திருந்த மற்றும் இறை மாமா, அருளி மாமாக்களின் தொங்கிய முகங்கள் செய்தியை முழு உறுதிப்படுத்தின.

நிறைத்துக் கொண்டு செல்லும் வாடகைப் பெருமகிழுந்து தக்கை போல் நகர்ந்தது. இறுதி நாட்கள் கதைகளை அவர்கள் மொழிந்து கொண்டு வர வண்டி சென்னை நகருக்குள் விரைந்து கொண்டிருந்தது. தியாகராயர் நகரை நோக்கிச் சென்று கொண்டிருந்த வண்டி மெதுவாக, மிக மெதுவாக தென்மேற்குப் போக்கு சாலையினுள் நுழைந்தது. மிகப் புதிய சூழலில் அந்த வியாழன் இரவு ஒரு மணிக்குமேல், கணக்குப்படி வெள்ளி தொடங்கிய அந்த வெளிர் இருளில் 'இது தான் நம் வீடு' என்று காட்டிய வழியில் கண்களைமூடிக் கொண்டே நுழைந்தேன். 'எங்கே என் அப்பா' என்று தொபீரென வணங்கி விழுந்தேன். என் தந்தையாரையல்லாது வேறு எந்த ஒரு காட்சியையும் காண மறுத்த என் கண்கள் நெடுநேரம் வரை மூடிக் கொண்டிருந்தன. நெடு நேரத்திற்குப்பின் தொண்டைநீர் முற்றும் வற்றிய நிலையில் சுற்றுப் புறச் சிறுசிறு ஆறுதல் குரல்கள் என் சூழல் விளக்கின. அம்மா எங்கே...? அம்மா! அம்மாவைக் கட்டி... பிறகு ஒவ்வொருவராய் கட்டிய நிலையில் அரைக் கண்களை மட்டும் வேண்டா விருப்புடன் திறந்து அப்பாவை நோட்டம்விட்டேன். அத்தனைப் பேரைச் செருகிக் கொண்டிருந்த ஒரு வெறுமை படர்ந்திருந்த அந்த இல்லத்தில் என் மனம் முழு ஏக்கத்தை நிறைத்துக் கொண்டு, இல்லாத ஓர் உருவத்தைத் தேடிக் கொண்டிருந்தது. விடியலுக்குப்பின் அம்மாவொடும் மற்றும் சில சுற்றத்தினருடனும் இராமச்சந்திரா மருத்துவமனையை அடைந்து, அந்த ஐந்து நாட்களாய், வெற்றிலை போட்டிராத வாயுடனும் நெல்லிநெய்

தடவிச் சீவியிராத தலையுடனும் சலவை போட்டிராத வெள்ளை உடையுடனும், காலணி அணிந்திராத வெறுங்காலுடனும், நிமிர்ந்து நிறுத்தியிராத நெஞ்சுடனும், எல்லாவற்றிற்கும் மேலாகக் காணத்துடிக்கும் விரிந்த கண்களை மூடிய நிலையில் - அரை உருண்டையைக் கடந்து ஓடிவந்திருக்கும் இந்த மகளைக் காணாது வரவேற்ற அந்த உருவைக் கண்டு துடித்துப் போனேன். இவர்தான் என் அப்பா என்று அடித்துக் கூறுவதற்குச் சான்றான, அந்த என் நினைவு தெரிந்த நாளிலிருந்து கண்டிருந்த அந்த மீசை - தாடியை நீக்கியிருந்த அந்த அப்பாவை வேறு யாரோ ஒருவர் நோக்குவது போல் நோக்கினேன். தொலைபேசியைக் கடந்து வந்து கலக்கிய பின்பு எல்லோரையுங் கண்டபின்பு முழு உறுதியாக்கப்பெற்ற அந்தச் செய்தியை ஒரே நொடியில் பொய்யாக்கிய அந்த உருவம் நான் எந்த நிலையில் காண வரும்போது இருந்தாரோ, அதற்கு தகுந்தாற்போல் வேறு உருவாய்க் காட்சியளித்து என் அடக்க வொண்ணா நெஞ்சக் குமுறலை அடக்கிப் போட்டது. நெடுஞ்செலவு நோக்கத்தின்படியே தந்தையுடலைக் கண்டதாகக் கொண்டேன் என்றாலும், ஏறு நடை கொண்ட அந்த வீறு மிகு தோற்றத்தில் உயிரோவியமென அவர் எல்லோர் உள்ளத்திலும் நிமிர்ந்து நிற்கின்றார். ●

கருதளவு

குறிப்பான அளவைக் குறிக்கப் பல்வேறு இடங்களில் வெவ்வேறு சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஏறக்குறைய, ஏறத்தாழ, கிட்டத்தட்ட, குத்துமதிப்பாக எனவும்; ‘அனுமானமாக’, ‘உத்தேசமாக’, ‘சுமாராக’ எனவும்; குனுசா அல்லது குன்சா எனவும்;அப்புராசிமேட்டா எனவும் பேசப்படுவதைக் காணலாம். இவற்றுள் அனுமானம் முதலானவை தமிழ்ச்சொற்கள் அல்ல என்பது வெளிப்படை.

இன்னும் ‘கண்ணோட்டம்’ ‘புள்ளிபார்த்தல்’ என்னுஞ் சொற்களும் பொது வான மதிப்பீட்டைக் குறிக்குஞ் சொற்களாக வழக்கத்தில் உள்ளன. மொழி ஞாயிறு பாவாணர் அவர்கள் ‘தோராயம்’ என்னுஞ் சொல்லைத் தமது நூல்களில் பயன்படுத்தியுள்ளார். கல்வெட்டுகள் இவற்றின் வேறான ஒரு சொல்லைப் பயன்படுத்தியுள்ளன. அதுவே ‘கருதளவு’! கோப்பெருஞ்சிங்கனின் திருச்சிற்றம்பலத்துக் (சிதம்பரம்) கல்வெட்டை எடுத்துக்காட்டாகக் கூறலாம். அதன் பகுதி வருமாறு:

“திருச்சிற்றம்பலமுடையார் திரப்பு நந்தவனங்களில் கயிலாய தேவன் திருநந்தவனத்துக்கு மேற்கும் கொள்வான் நிலத்துக்கு வடக்குமாக இவ்விசைந்த இந்நான் கெல்லையிலும் உட்பட்ட கருதளவில் மிகுதிக் குறைவுள்ளடங்க ஊர்க் கொல்லை நிலத்தில் செம்பாதிநிலமும் ஆக நிலம் எட்டுமாவும்“

இதே போன்று பலவிடங்களில் கருதளவு கருத்தளவு என்னுஞ் சொற்கள் குறிப்பான அளவையைக் குறித்தலைப் பரக்கக் காணலாம்.

- குழந்தை

இப்படி என்றால் எப்படி விடுதலை?

மொழிநலத்தைப் பேணாமல் பாட்டெழுதும் எவனும்
மூங்கையென்க! முண்டையென்க! தாயினையே கொல்லும்
பழியுளத்தான் அவனென்க! பதரென்க! கள்ளிப்
பாலென்க! பழுதென்க! பகட்டுலகில் மேய்வான்!
இழிவெடுத்தாள் போலுடலை விற்றிருக்கும் பரத்தை
இவனெனலாம்! தமிழ்க்கிவன்போல் பாவலர்கள் என்றால்
அழிவினைத்தான் நிலம்தழுவும்! அடிமைநிலை ஓங்கும்!
அடடா! என்(று) இந்நிலமும் தனைமீட்டுக் கொள்மோ?

இனநலத்தை நினையாமல் கதைஎழுதும் எவனும்
எத்தனென்க எழுத்தாளன் அவனில்லை என்க!
மனவளத்தை, பண்பாட்டைக் கெடுக்கின்ற வகையில்
வாய்க்குவரும் மொழிஎழுதிப் படைப்பாளன் என்பான்!
கனமலத்தைப் போலிருக்கும் அவனெழுத்துக் குவியல்!
கடைஎனலாம்! தமிழ்க்கிவன்போல் எழுத்தாளர் என்றால்
இனம்கெடத்தான் கெடும்! மேலே எல்லாமும் தொலையும்!
இந்நிலமிங் கெப்படித்தான் தனையீட்டுக் கொள்மோ?

நிலப்பெருமை இல்லாத நாடகங்கள், படங்கள்
நிகழ்த்துபவன் முடிச்சுமாறி! பகல்கொள்ளைக் காரன்!
கலக்கலினைப் போலிருக்கும் கற்பனைகள்! பொய் எனலாம்!
கடைத்தேற வழியில்லா மக்களினைத் தின்பான்!
நலப்பொலிவைச் சாகடிக்கும் நச்சிவர்கள்! யார்க்கும்
நன்மை இல்லை! தமிழ்க்கிவர்கள் தாமென்றால், அடடா!
வெலவெலத்துத் தான்போகும்! வீரமிழிந் தழியும்!
விடுதலைதான் எப்படித்தான் இங்குமலர்ந் திடுமோ?

- பாவலர் இளஞ்சித்திரன்

அறுபதெய்திய ஆறு. அழகப்பனார்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராக இருந்தும், மற்றும் பல பொறுப்புகளைத் தாங்கியும் அயல்நாடுகள் பலவற்றில் சுற்றுச் செலவு மேற்கொண்டும், ஆராய்ச்சி வகையிலும் படைப்பிலக்கியங்களாகவும் பல நூல்களை ஆக்கியும் அருந் தமிழ்ப் பணியாற்றிய முனைவர் ஆறு. அழகப்பனார் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைக்குப் பாவலரேறு ஐயா அவர்களைச் சிறப்புப் பேராளராக வரவேற்றுச் சிறப்பித்த பெருமைக்குரியவர். அவர் சென்னையில் 'தமிழ் சமற்கிருதம் மற்றும் இந்திய மொழிகள் ஆராய்ச்சி நிறுவன' இயக்குநராக இருந்தபோது சொல்லாய்வு அறிஞர் அருளியார் அவர்களைக் கொண்டு சொல்லாய்வுத் தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்தச் செய்து பயனுறு பணிபுரிந்தவர்.

தொடர்ந்து தமிழ்ப் பணிகளிலேயே தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருப்பதோடு இந்திய நடுவணரசு இலக்கியக் கழக (சாகித்திய அகாடெமி) உறுப்பினராகவும், பல்கலைக் கழகத் துணைவேந்தர் அமர்த்தக் குழு உறுப்பினராகவும் விளங்கும் முனைவர் ஆறு. அழகப்பனார் அறுபது அகவை எய்தியிருப்பதையறிந்து அவர் நீடுவாழ வாழ்த்துகிறோம்.

- ஆசிரியர், 'தென்மொழி'

T-5849

திராவிட ஆளுமை

- மா. பூங்குன்றன்

திராவிடம் என்பது இனி தேவையற்றது; தமிழர் தவிர்த்த பிற மாநிலத்தவர் மலையாளியர், கன்னடர், தெலுங்கர் இதைப் பொருட் படுத்துவது கிடையாது. பெரியாரும் தமிழ்நாடு தமிழர்க்கே என்றுதான் இறுதியில் கூறிவந்தார் எனப் பாவலரேறு ஐயா அவர்கள் தமிழ்நிலத்தில் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு கி. வீரமணி அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கும் வகையில் 1993 வாக்கில் தொடர் கட்டுரையாக எழுதி வந்தார்கள்.

திரு. குணா அவர்களின் 'திராவிடத்தால் வீழ்ந்தோம்' என்ற நூல் வந்தது. அதில் பெரியாரைக் கொச்சைப் படுத்துவதாகப் பல இடங்கள் அமைந்திருந்தன. வந்த வேகத்திலேயே இந்நூல் காட்டுத் தீப் போலப் பரவத் தொடங்கியது. இந்நூலுக்கு ஆதரவும் எதிர்ப்பும் பெருமளவில் வந்தன. பாவலரேறு ஐயா அவர்களும் இந்நூலைப் படித்தார்கள். அவர்கள் இந்நூலை வரவேற்கவில்லை. 'இந்நூலில் உண்மைகள் அடங்கியிருக்கலாம். ஆனால் இப்படியோடு நூல் வந்திருக்கக் கூடாது' என்றே கூறினார்கள்.

இந்நூலுக்கு மறுப்பு நூலாகத் 'திராவிடத்தால் வீழ்ந்தோமா? சாதியத்தால் வீழ்ந்தோமா?' என்று திரு கருணா மனோகரன் நூல் வெளிவந்தது. 'திராவிடத்தால் வீழ்ந்தோம்.' நூலை விற்பனைக்கு எடுத்துக் கொண்டு போகும் சில விடங்களில் விற்பனையாளர்கள்கூட தாக்கப் பட்டனர்.

இதையடுத்து ஓர் இயக்கத்தினர், அரசியல் முதல் அலுவலகங்கள், திரைப்படத் துறை போன்ற ஒவ்வொரு துறையிலும் தமிழரல்லாதார் மேலிடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளனர் என்று பட்டியல் ஒன்றை அச்சிட்டு ஆங்காங்குக் கூட்டங்களில் பரப்பத் தொடங்கினர்.

தென்மொழி தோழமை இயக்கங்கள் இதை ஆதரிக்கின்றனவோ என்று ஐயம் ஒரு சிலரிடை ஏற்பட்டுள்ளது. தென்மொழிக்கு இது பற்றி வேறு ஒரு கருத்து உண்டு என்று முன்பொரு இதழில் குறிப்பிடப் பட்டிருந்தது. இதற்கிடையில் 'குணாவின் திராவிடத்தால் வீழ்ந்தோம் பற்றிய குறிப்புகள்' என்று குமரி மைந்தன் என்பவரின் நுல், உலகத் தமிழின முன்னேற்றக் கழக நிலைப்பாட்டை எதிரொலிக்கின்றன என்று கொள்ள வேண்டியதில்லை என்ற பறம்பை அறிவன், குறிப்புடன் உ.த.மு.க வெளியீடாக வெளிவந்துள்ளது.

இந்நூலில் திராவிடத்தால் விளைந்த தீமைகள் மேலும் அலசப் படுகின்றன. சாதியத்தால் வீழ்ந்த நிலைகளும் காட்டப்படுகின்றன. முடிவில் தமிழரல்லாதவர்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்து யாரை எவ்வாறு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று தரப்படுத்துகிறது இந்நூல். (இதன் திறனாய்வு பின்பு வெளிவரும்).

பொதுவாக யார்மீது யார் ஆளுமை செலுத்தினாலும் கண்டிக்க வேண்டும் என்கிற பொதுத் தன்மைக்கு நாம் வந்துவிட வேண்டும். பார்ப்பன ஆளுமையை எதிர்க்கத் திராவிடர்கள் என்று ஒன்றானோம். பார்ப்பன ஆளுமை என்பது பொது எதிரிமை என்பதால் ஒன்றானோம். பெரியார் பகுத்தறிவுக் கொள்கையைப் பார்ப்பன எதிர்ப்பியக்கமாக மலர்த்தினார். ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தினார் என்பதை யாரும் மறுக்க முடியாது. திராவிட நாடு என்ற கோரிக் கையைப் பிற்காலத்தில் தமிழ்நாடு தமிழர்க்கே என்று மாற்றியவர் பெரியார்.

தமிழினத்திற்காகச் சிந்திக்கிறவர் தமிழர்களுக்குள் மிகுதியாக வெளிவராத காலக்கட்டங்களில் பிற மொழிகளைத் தாய் மொழியைக் கொண்ட தமிழ்நாட்டினரும் தமிழினத்திற்காகச் சிந்தித்தார்கள்.

இவர்களின் சிந்தனையும், ஆக்கங்களும் தமிழர்களுக்கு மிகவும் தேவையானவாகவே இருந்தன. இதற்கிடையில் தமிழர்களுக்கிடையில் சாதிப் பிரிவுகள் மேலோங்கித் தனித்தனி இயக்கமாக இயங்கத் தொடங்கின. அதேபோல் தாய்மொழி தமிழில்லாத தமிழ்நாட்டு வாழ்நர்களும் தங்கள் சாதிகளை நினைவு கூர்ந்து தங்கள் தாய்மொழி மாநிலங்களில் சலுகைகளைத் தமிழ்நாட்டிலேயே பெறத் தொடங்கினர். (ஆனால் பிற மாநிலங்களில் வாழும் தமிழர்கள் இவ்வாறான சாதிச் சலுகைகளைப் பெறமுடிவதில்லை) அவர்கள் பெரியாரின் பார்ப்பன எதிர்ப்பைப் பயன்படுத்திக் கொண்டும் மட மட வென்று ஒவ்வொரு துறையிலும் மேலிடத்தைக் கைப்பற்றத் தொடங்கினர்.

இன்றைக்குப் பார்ப்பன ஆளுமையொரு புறமும் திராவிட ஆளுமை மறு புறமும் உயர்ந்து நிற்கின்றன. அவ்வாறு நின்ற பல்லாண்டு களுக்குப் பிறகே இப்போது நமக்கு உறைத்துள்ளது. பாவலரேறு ஐயாவும், அறிஞர் குணாவும் இதை முதலில் அடையாளம் காட்டி வெளிப்படுத்தினர். ஆனால் குணா பெரியாரையும் கொச்சைப் படுத்திக் கூறிவிட்டார் என்பது பலராலும் ஏற்க முடியாததாகிவிட்டது. பாவலரேறு ஐயாவுக்கும், இக்கருத்து ஏற்பில்லை அதேபோல் இன்று பல தோழமை இயக்கங்களில் உள்ள பிறமொழிகளைத் தாய் மொழியாகக் கொண்ட தோழர்களையும், தமிழ் அறிஞர்களையும் திறனாய்வு செய்வது என்பது கூடாது என்பதே தென்மொழியின் கருத்தாகிறது. அவர்களைக் கொச்சைப்படுத்துவது எந்த வகையிலும் ஞாயமில்லை.

அதே நேரத்தில் திராவிட ஆளுமையை எதிர்க்க வேண்டும். சாதியம் போல் கேடு செய்யத் தொடங்கிய பின்தான் இந்த எதிர்ப்பு தலைதூக்கியுள்ளது. அத்துடன் தமிழ் இனத்திற்கும் மொழிக்கும் பாடு படும் அறிஞர்கள் இதற்கு அப்பாற்பட்டவர்கள் என்பதை மனத்தில் இறுத்தல் வேண்டும். ●

பிடுங்கிக் கொள்ளுங்கள் !

திருச்சியில், கடந்த இருபத்துநான்கு ஆண்டுகட்கு முன் (1972) தமிழக விடுதலை மாநாடு நடைபெற்றது. 'தென்மொழிக் கொள்கைச் செயற்பாட்டு மாநாடு' என்னும் பெயரில் அம் மாநாட்டை நடத்தினோம். மாநாட்டையொட்டி நடைபெற்ற ஊர்வலம் பன்னிரு கல் தொலைவு வீரநடையிட்டு வந்தது. **'தமிழ்நாடு தமிழருக்கே!'** என்னும் முழக்கத் வான் அதிர்ந்தது. எழுத்து வடிவ முழக்கங்கள் பதாகைகளில் பளிச்சிட்டன. அறப்போர் வீரர்கள் ஒவ்வொருவரும் போர்க்கொடி தாங்கி வந்தனர்!

எழுச்சிமிக்க அவ்வூர்வலம் இடைவழியில் காவல் துறையினரால் தடுத்து நிறுத்தப்பட்டது. அவ் வளவில் முன்னையினும் பன்மடங்காக முழக்கங்கள் ஓங்கி ஒலித்தன!

மாநாடு - ஊர்வலம் முறைப்படி காவல்துறை இசைவு பெற்றே நடத்தப் படுகிறதென்றும், திட்டமிட்டபடி கட்டுப்பாட்டுடனும் ஒழுங்காகவும் நடைபெறும் போராட்ட முயற்சிகளைச் சீர்குலைக்கும் வகையில் தடைசெய்தால் அத்தடையை மீற நேருமென்றும் மாநாட்டு அமைப்பாளரான பாவலரேறு ஐயா அவர்கள் காவல்துறை அதிகாரியிடம் எடுத்துரைத்தார்.

காவல்துறை அதிகாரி, சட்டத்திற்கு முரணான முழக்கங்களைத் தாம் ஒப்பமுடியாதென்றும், தாம் நடவடிக்கை எடுத்ததற்கு அடையாளமாகக் கொடிகளையெல்லாம் காவலர்களிடம் கொடுத்துவிடுமாறும் கூறினார்.

பாவல : நாங்கள் கொடிகளைக் கொடுக்க முடியாது. நீங்கள் வேண்டுமானால் பிடுங்கிக் கொள்ளுங்கள்!

கா.அ. : நீங்கள் கொடுத்தாலும் நாங்கள் பிடுங்கிக் கொண்டாலும் இரண்டும் ஒன்றுதானே!

பாவல : அது எப்படி இரண்டும் ஒன்றாகும்? நாங்கள் விரும்பிக் கொடுப்பதும், நீங்கள் வலிந்து பிடுங்கிக்கொள்வதும் ஒன்றுதான் என்றால் கொடுக்கும்படி ஏன் வேண்டுகிறீர்கள்? பிடுங்கிக் கொள்ளுங்களேன் ...?

கா.அ. : இல்லை... ஐயா! வலிந்து பிடுங்குகிறபோது உங்கள் தொண்டர்கள் சினந்து காவலர்களைத் தாக்குவார்களானால் நிலைமை வேறுவகையாக மாறிவிடும்...

பாவல : எங்கள் வீரர்கள் படித்தவர்கள்; பட்டம் பெற்றவர்கள்; பண்பாடு நாகரிகங் கற்றவர்கள்; குமுகாயப் பொறுப்பு உணர்ந்தவர்கள். குண்டர்கள் அல்லர். நீங்கள் உங்கள் கடமையை முறையாகச் செய்தால் நாங்கள் முறைகேடாக நடக்க மாட்டோம்!

பாவலரேறு அவர்களின் விளக்கத்துக்குப் பின்னர்க் காவலர்கள் எங்கள் கைகளிலிருந்த கொடிகளைப் பிடுங்கிக் கொண்டனர். வீர முழக்கம் விண்ணைப்பிளக்கப் பேரணி தொடர்ந்து மாநாட்டு அரங்கத்தை நோக்கி முன்னேறியது.

இறை

பொத்தகமும் ஆடவையும்

பொத்தகமா. புத்தகமா ? நான் பொத்தகம் எனச் சொல்லியுள்ளேன். இலங்கைக்கனார் ஒருவர் - படித்தவர் ஒப்புக் கொள்ள மறுக்கிறார். எதுசரி ?

- நட. குருமூர்த்தி, சவூதி அரேபியா

பொருத்துதல் என்னும் சொல்லின் முதனிலையாகிய பொருத்து என்பது பொத்து என்று ஆகிப் பொத்தகம் என்று அமைந்துள்ளது. எழுதிய ஏடுகளைப் பொருத்திக் கட்டப்பட்ட தொகுதி பொத்தகம் ஆயிற்று என்பது மொழிஞாயிறு பாவாணர் விளக்கம்.

பொத்தகம் என்னுஞ் சொல் நூற்புத்தகம் என்னும் பொருளில் 'பெருங்கதை'யிலும், கணக்குப் புத்தகம் என்னும் பொருளில் கல்வெட்டிலும் இடம் பெற்றுள்ளது. நாலடியாரில் புத்தகம் என்னுஞ் சொல்லும் ஆளப்பெற்றுள்ளது.

'தென்மொழி'யின் முன்னை இதழ்களில் இடம் பெற்றிருந்த 'இரட்டை' என்னுந் தமிழ்மாதப்பெயர் பின்னர் 'ஆடவை' என்று மாற்றப் பெற்றிருக்கிறதே, ஏன் ? இரட்டை என்பது தவறா ?

- இளங்கோவன், மதுரை

சுறவம் முதல் சிலை ஈறாக வழங்கப்பெறும் பன்னிரு மாதப்பெயர்களும் ஓரை(இராசி)களை அடிப்படையாய்க் கொண்டவை. ஆடவை, இரட்டை என்னும் இரண்டுமே மிதுனம் என்னும் வடமொழிப் பெயருக்குரிய தமிழ்ப் பெயர்களாகத் தமிழ் அகரமுதலிகளில் குறிக்கப்பெற்றிருக்கின்றன. இருப்பினும் இரட்டை என்னுஞ் சொல்லை முதலில் வழங்குவித்த பாவாணர் அவர்களே பின்னர் ஆடவையே சிறந்ததென்று ஆளச்செய்தார்.

இப் பெயர்களாற் சுட்டப்படும் ஓரை (மிதுனம்) உயர்திணையாகிய மாந்த இணையின் தோற்றமாக அறியப்படுதலானும், இரட்டை என்னுஞ்சொல் அஃறிணைக் கன்றி உயர்திணைக்கு ஏலாமையானும் ஆடவையே ஏற்புடையதெனக் கொள்க!

ஆள் + அவை = ஆளவை என்பது ஆட்சேர்க்கை - மாந்தஇணை என்னும் பொருளது. ஆளவை-ஆடவை என்று ஆயிற்று.

ஒ.நோ: கெளிறு - கெடிறு.-

- இறை

சென்னை ஒரு நிலைப்பட்டது!

தம் மரபுக் கூறுகளைப் புதுப்பிப்பதும் நடைமுறைப் படுத்துவதும் ஒவ்வொரு இனத்திற்கும் இனிமையானதாகும். இந்தியா போன்ற கூட்டு இன நாடுகளில் போட்டிப் போட்டுக் கொண்டு தம் அடையாளத்தை முற்படுத்தவில்லையெனில் பிற இனங்கள் ஆளுமை செய்து அழித்தேவிடும் என்கிற நிலைமை. மைசூர் மாநிலம் 'கருநாடக'மானது. பம்பாய் 'மும்பை' ஆனது. அதன் வழியில் மதராஸும் (Madras) சென்னையுமாக இருந்த இருமொழிப் பெயர் இன்று சென்னையாக நிலைப்படுத்தப்பட்டது குறித்து மகிழ்வுடைகிறோம்.

கலைக்களஞ்சியம் கூறுவது போல் உயர் அற மன்ற கட்டிடம் உள்ள இடத்தில் 350 ஆண்டுகளுக்கு முன் சென்ன கேசவர் கோயில் ஒன்று இருந்தது. தினமணி இதழ் கருத்துக் கூறுவது போல் சென்னி கேசவர் கோயிலாகவும் இருக்கலாம். இதைச்சுற்றிய சென்ன கேசவபுரம் என்பது சிறு குப்பம். இதனையொட்டியே இன்றைய கோட்டை கட்டுவதற்கு இடமளித்த அய்யப்பநாக்கன், வேங்கடப்ப நாயக்கன் இருவரின் தந்தை சென்னப்ப நாயக்கன் பெயரால் 'சென்னப் பட்டினம்' என்று அழைக்கப்பட்டது.

கோட்டையிருந்த இடத்தை ஆண்ட சந்திரகிரி என்ற அரசனின் கீழ் ஆண்ட மதுரேசன் என்ற சிறறரசன் பெயரால் 'மதராஸ்' தோன்றியது என்றும், முசுலீம் கல்லூரிக்குப் பெயரான 'மதரஸா' என்ற பெயர் 'மதராஸ்' என்று மருவியது என்றும் கூறுவர்.

எவ்வாறிருப்பினும் சென்னை என்ற ஒரு பெயரையே நிலைப்படுத்திய அரசுக்குப் பாராட்டுகள்!

- பூங்குன்றன்.

இந்தியன் யார்?

'மீமென்மியம்', (Micro Soft) என்னும் நிறுவனம் அண்மையில் வெளியிட்டுள்ள பெயின் (Spain) மொழி மெல்லிய (Software)த்தின் அகர முதலிப் பகுதியில் 'இந்தியன்' என்ற சொல்லுக்கு நரவூன் உண்போர் என்று பொருள் குறிக்கப் பட்டிருந்தமையால் கலாம் விளைந்திருக்கிறது.

ஆகவே, அடுத்துவரும் பதிப்பில் 'இந்தியன்' என்பதற்குப் பழம் பெருமை வாய்ந்த நாகரிகம் நிறைந்த நாட்டில் வாழ்பவன் என்று பொருள் இருக்குமாம்

செம்பி

நூல் மதிப்புரை

நூல் : வட்ட நிலா

ஆசிரியர் : **பாவலர். இரா. சுப்பிரமணியன்** (இளவழகன்)
க.மு., மெய். மு.

வெளியீடு : வேங்கை வெளியீடு
பாவேந்தர் பதிப்பகம். மலைக் கூடம்,
மூன்றாம் தளம்
758, அண்ணா சாலை, சென்னை - 600 002.

விலை : உரு. 40. 00

மழலை மொட்டுகள், மழலை மலர்கள், இளையவர் இசைமணம் என்ற மூன்று பகுதிகளைக் கொண்ட குழந்தைப் பாடல் நூல். குழந்தைப் பாடல்களை எழுதி வெற்றிபெற்றவர்கள் தமிழில் மிகக் குறைவு. குழந்தைகளுக்கு மிகவும் பழக்கமான பாடற் பொருளை எடுத்துக் கொண்டு எளிமையான சொற்களுடன் இசை நயத்தைக் கூட்டும் பணி குழந்தைப் பாடல்களை எழுத முனைவோர்க்கு உண்டு. மென்மையான சொற்களும் அமைதியான நடையும் குழந்தைகளுக்கு மனத்தில் பதியும். பாவலர் இளவழகன் மிகவும் நன்றாக இப்பாடல் தொகுதியைக் கையாண்டுள்ளார். இயைபுத் தொடை வகையர்கப் பாடல் வரிகளின் ஈற்றில் எதுகை மிளிர்கின்றது. சிற்சில இடங்களில் பொருளை அறிமுகப் படுத்தாமலே தொடங்கி, பின் அறிமுகப் படுத்துவது குழந்தைப் பாடல்களுக்குப் பொருந்தாது. குழப்பமில்லாத கொடர்களே மழலை நெஞ்சத்துள் புகும்.

"மிதிக்க மிதிக்க இடம்தாண்டி
மிதித்தால் ஓடும். மிதிவண்டி"

போன்ற இடங்கள் இவ்வமைப்பில் உள்ளன. எதுகைக்காகச் சொற்கள் தேவையில்லாமல் பல இடங்களில் இடம் பெறுகின்றன.

குழந்தைகள் நிற்பர் அதனைச் சுற்றி
கோலை எடுத்தால் ஆடும் நீட்டி

எதுகைக்காகச் சிதைவுச் சொற்களைப் பல இடங்களில் கையாள்வதை ஆசிரியர் தவிர்த்திருக்கலாம் 'பாப்பா' - கேட்பா (கேட்பாள்); மா.கோ. இரா - நாள் பூரா. 'நாம் மதித்துக் கொண்டல் நாடு பூஞ்சோலை' என்பன போலும் பிழைகள் காணப்படுகின்றன. தனித்தமிழ்ப் பற்றாளரான இவர் சிற்சில வடமொழிச் சொற்களையும் தவிர்த்திருக்கலாம்.

உயர்ந்த அச்சுத்தாள், அட்டை இவை பதிப்பின் மதிப்பை உயர்த்துகின்றன.

- பூங்குன்றன்

நமக்கு வந்த மடல்கள்.

பேரன்புடையீர், வணக்கம்! தாங்கள் அன்புடன் அனுப்பிய நினைவு மலர்க்கான கட்டுரை கோரிய மடல்களும், நினைவுமலர் வெளியீட்டு அழைப்பிதழும் பெற்றேன். மிக்க நன்றி.

சென்ற திங்களிலும், மேத் திங்களின் இறுதியிலும் தேர்தல், என் மகள் திருமணம் போன்றவற்றில் முழுமையாகக் கட்டுண்டு கிடந்ததால் மலருக்கு ஏதும் எழுத இயலவில்லை., வாய்ப்பை இழந்தேன்.

என்றென்றும் பாவலரேறு அவர்கள் என் நெஞ்சில் நிறைந்திருந்து, என் பணிகளில் வெளிப்படுவார். நிலையான அவர்தம் புகழைப் போற்றுவோரில் நானும் ஒருவன்.

அவர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து ஆற்றிவரும் தங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியும் வாழ்த்துகளும்!

அன்பன்

- கு.ச.ஆனந்தன், கோபி

ஐயா, வணக்கம்! ஈரோடையில் பாவரசு முடியரசனார் முத்தமிழ் மன்றம், உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் ஆகியவற்றின் சார்பில் நடைபெற்ற பாவலரேறு ஐயாவின் முதலாண்டு நினைவு நிகழ்ச்சி (28.7.96) ஏறத்தாழப் பு.இ.மு. நிகழ்ச்சியாகவே நடைபெற்றது.

திரு. தமிழ்மாறன் பேசும்போது தேவையில்லாமல் ஐயாவைத் திட்டினார் என்பதுதான் உண்மை. அவரைப் பற்றி முறையான திறனாய்வு (விமர்சனம்) செய்திருந்தால் ஏற்றுக் கொண்டிருக்கலாம். அப்படித் திறனாய்வு செய்வதற்குக் கூட இவர் எந்த நிலையில் தெளிவாக உள்ளார் என்பது கேள்வி.

ஒட்டுமொத்தமாக ஐயா அவர்கள் தமிழ்நாட்டு விடுதலைக்கென முப்பது ஆண்டுக் காலமாக உழைத்த உழைப்பையும் அவர் உணர்வையும் கொச்சைப்படுத்த நினைக்கிறார்கள்; அல்லது அழிக்க நினைக்கிறார்கள் என்றுதான் சொல்லமுடியும்.

இந்நிகழ்ச்சி என் மனத்தைத் தாக்கியுள்ளது. இதற்கு நாம் என்ன செய்யப் போகிறோம்...?

நிலவன் (பூபதி), ஈரோடை.

* தமிழறிஞர்கள், இனநலவுணர்வாளர்கள், நாட்டு விடுதலைப் போராளிகள் முதலான பலதுறைப் பெருமக்களிடமும் இருக்க வேண்டிய நலமிகு கருத்துக் களஞ்சியம்!

* இளைய தலைமுறையினர் ஒவ்வொருவரும் கட்டாயங் கைக்கொள்ள வேண்டிய அரும்பொருட் பெட்டகம்!

* பாவலரேறு அவர்களின் வாழ்க்கை வரலாறு, தென்மொழி வரலாறு, இளமைக்காலம் முதல் இறுதிவரை பல்வேறு தோற் றங்களில் ஒளிரும் ஐயா அவர்களின் ஒளிப்படங்கள், ஓவியங்கள், ஐயா அவர்களைப் பல் வேறு கோணங். களில் படம் பிடித்துக்காட் டும் அரிய கட்டுரைகள், பாடல்கள் ஆகியவை இடம் பெற். றுள்ளன.



* தமிழக முதல்வர் கலைஞர், மருத்துவர் இராமதாசு, பழ.நெடுமாறன், கி.வீரமணி, வை.கோபாலசாமி, வே. ஆனைமுத்து, திருவாரூர் தங்கராசு, பேரா.சாலையார். -சாலினியார், இலாரென்சு திலகர், அறிஞர் குணா, மருத்துவர் குருகுலமித்திரா, பெ.மணியரசன், தியாகு, இரா.திருமாவளவன், முனைவர் கா.பொ.இரத்தினம், பேரா.ம.இலெ. தங்கப்பா, முனைவர் ஆறு.அழகப்பன், பழ.கருப்பையா முதலானோர் எழுதியுள்ளனர்.

விலை உரு.60. பதிவஞ்சலில் பெற உரு.75அனுப்புக
'தென்மொழி நூல் வெளியீட்டு-விற்பனையகம்',
சென்னை-600 005